செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௩] வள்ளுவர் ஆண்டு ௨௦௧௦, பங்குனி Apr, 79 [பரல்-௨

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்
(Subscription Rates)

உள்நாடு ரூ. 12 00	வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00	வெளிநாடு ரூ. 200 00

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருரு	திருவள்ளுவர் ஆண்டு உ௰, பங்குனி ஏப்பிரல் 1979	பரல் அ

பல்கலைக்கழகப் பாடநூற்குழுவினரின் பார்வைக்கு

பன்னெடுங் காலமாகத் தன்னிலை மறந்து அடிமையிலும் மிடிமையிலும் அயர்ந்துறங்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டி யெழுப்பும் பெருமுயற்சியில் ஈடுபட்டு அரும்பணியாற்றிய சிறப்புக் குரியவர் தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு **மறைமலையடிகளார்** ஆவர்.

> "தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங் கியது. அவ் வுறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகட் குண்டு. அவர்தம் தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிப்படையச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும்!"

என்னும் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களின் உறுதியுரையை நோக்குக!

அடிகளார் பன்மொழி பயின்ற பாங்குறு சிறப்பினர்; தமிழ் வடமொழி, ஆங்கிலம் என்னும் முப்பெரு மொழிகளிலும் ஒப்பிலாப் புலமை நலம் வாய்ந்த ஒள்ளியர்; தம் வாழ்நாள் முழுதும் - சாந் துணையும் அல்லும் பகலும் அயராது பல்துறை சார்ந்த அரிய பல ஆங்கில நூல்களையும், கலைகளையும் ஆராய்ந்து பயின்று கடைப் பிடித்த சீரார்ந்த திறவோர்.

> *"தாமின் புறுவ(து) உலகின் புறக்கண்டு*
> *காமுறுவர் கற்றறிந் தார்"*

என்னும் மெய்ம்மொழிக் கிணங்கத் தாம் அரிதின் முயன்று தொகுத்துப் பயின்ற அருநூல்களையெல்லாம் மக்கள் அனைவருக்கும்

பயன்படும் வண்ணம் தம் பெயரில் ஒரு பொதுநூல்நிலையத்தை நடத்தல் வேண்டும் என்று தாம் எழுதிய விருப்ப ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அதன்படி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் தம் நன்முயற்சியால் அடிகளார்தம் மணிமொழி நூல் நிலையம் இன்று மறைமலையடிகள் நூல்நிலையமாகப் புலவர் பெருமக் களுக்கும் ஆராய்ச்சியாளர்க்கும் பயன்படுமாறு சென்னை, இலிங்கிச் செட்டித் தெரு, 261ஆம் எண் மாளிகையில் அறிவொளி பரப்பி எழிலுற விளங்கிவருகின்றது.

மொழி, சமயம், வரலாறு, உளவியல், உடலியல், மருத்துவம் முதலிய பல்வேறு துறைகளில் பாநடையும், உரைநடையுமாகவும், புத்தாக்கமும், மொழிபெயர்ப்புமாகவும், கட்டுரையும் ஆராய்ச்சியும், உரைவிளக்கமும், எதிர்மறுப்புமாகவும், நாடகமும், புதுக்கதையும் பிறவுமாகவும் அடிகளார் அவர்கள் ஐம்பான் அருநூல்கள் எழுதித் தாமே வெளியிட்டுள்ளனர். அவற்றுள் ஆங்கில நூல்களும் மூன்றுள. சிறுவர் நூல்களும் சிலவுள. சுருங்கக் கூறின் அடி களார் துறைதோறும் துறைதோறும் புதிய நூல்கள் வரைந்து வழி காட்டியுள்ளார் எனலாம்.

அடிகளார் நூல்கள் அனைத்தும் யாவருக்கும், சிறப்பாகத் தமிழ்ப்பெருமக்கள் அனைவருக்கும் அறிவாற்றலையும் நல்லுணர்வை யும் பெருக்கி ஆக்க நெறியில் ஊக்குந் திறத்தன; மெய்யுணர்வில் தோய்விக்கும் மேன்மை வாய்ந்தன; சீரிய செந்தமிழ் நடையைப் பயிற்றும் பான்மையன. அவை எத்தனையோ பேர்களை ஏற்றமிகு எழுத்தாளராக்கின; பெருமை வாய்ந்த பேச்சாள ராக்கின; துக ளருஞ் சிறப்பின் தொண்டர்களாக்கின; தகுதி வாய்ந்த தலைவர்க ளாக்கின.

மறைமலையடிகளார் நூல்கள் பரவப் பரவ, அந் நூற்பயிற்சி மிகுதிப்பட மிகுதிப்பட நம் தமிழ்மக்கள் முன்னேற்றப் பாதையில் முனைந்து நடையிடுவர் என்பது உறுதி. ஆகவே, 'இளமையிற் கல்' என்னும் முதுமொழிக் கிணங்க அடிகளார் நூல்களைப் பள்ளி கல்லூரிகளிற் பயிலும் மாணுக்கர்கட்குப் பாடமாக வைப்பது கடமை யாகும்; கட்டாயமுமாகும்.

வடமொழியிற் சிறந்து விளங்கும் சாகுந்தல நாடகத்திற்கு அடி களார் வரைந்த மொழிபெயர்ப்பு பகைவரும் பாராட்டும் தனிச்சிறப்பு வாய்ந்த தொன்றுகும். அது நாடகம் என்னும் முறையில் பல்கலைக் கழகங்களில் பாடநூலாக வைக்கப்பட்டு வந்தது. அவ்வாறே அம்பிகாபதி அமராவதியும் பாடமாக வைக்கப்பட்டதுண்டு. ஆங்கிலப் புலவர் மணியான அடிசன் கட்டுரைகளின் தமிழாக்கமாக அடிகளார் வரைந்த சிந்தனைக் கட்டுரைகள் என்னும் நூலும், முற்கால பிற்காலத்

தமிழ்ப்புலவோர், **அறிவுரைக்கொத்து**, **பட்டினப்பாலை ஆராய்ச்சி**, **முல்லைப் பாட்டு ஆராய்ச்சி** முதலிய நூல்கள் சிற்சில யாண்டுகளில் பாடமாக வைக்கப்பட்டிருந்தன.

மதிப்புக்குரிய திருவாளர் **சிவராம சேதுப்பிள்ளை** யவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் பாடநூற் குழுத் தலைவராகவும் இருந்தபோது அடிகளார் நூல்கள் இரண்டையும், தனித் தமிழ்த் திருவாட்டி **நீலாம்பிகையம்மையார்** நூலொன்றையும் பாடமாக வைத்துத் தனிச் செந்தமிழ் வளர்ச்சிக் கும் மாணுக்கர் பயிற்சிக்கும் துணை செய்தார்கள்.

தமிழர்கட் கிடையே தமிழர்கள்தம் பொருளூட்டத்தினுலேயே வாழ்ந்து வரும் ஒரு சாரார் அடிகளார் நூல்கள் பாடமாக வைக்கப் படுவதை விரும்புவதில்லை. அடிகளார் நூல்கள்—கொள்கைகள் பரவுவது தமிழினத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமென்பதை நம் தமிழினத்தாரிற் பெரும்பாலார் உணர்ந்திலராயினும்,மாற்றினத் தார் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கின்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தினர் 1936இல் இடைநிலை வகுப் பிற்கு அடிகளாரின் '**அறிவுரைக் கொத்து**' என்னும் நூலைப் பாடமாக வைத்தபோது அதிலுள்ள **தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்** என்னும் கட்டுரையை எதிர்த்து ஒரு சாரார் கிளர்ச்சி செய்தனர். அந் நூலைப் பாடமாக வைக்கக் கூடாது என்று தாறுமாருக எழுதியும் பேசியும் ஆரவாரித்தனர். அது கண்டு கொதித்தெழுந்த **பெரியார் ஈ வே. இரா.** அவர்கள் அடிகளார் கட்டுரையில் வரைந்தன யாவும் உண்மையே என்று வலியுறுத்தியும், மாற்ருர் கருத்தை ஆணித்தரமாக மறுத்தும் **மறுப்புக்கு மறுப்பு*** என்னும் தனி நூலை வெளியிட்டும், சென்ற விடமெல்லாம் இது பற்றிப் பேசியும் எதிரி களின் கொட்டத்தை அடக்கினுர்.

1968இல் மேற்படி அறிவுரைக் கொத்திலுள்ள **தமிழ்த்தாய்** என்னுங் கட்டுரை பள்ளியிறுதி வகுப்பு மாணுக்கர்கட்குப் பாடமாக வைக்கப்பட்ட போதும் ஒரு சாரார் அதனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். **பேரறிஞர் அண்ணுத்துரையவர்களின்** தலைமையிலான அற்றைத் தமிழ் நாட்டரசு அச் சலசலப்பிற்குச் சிறிதும் அஞ்சாமை யால் மேற்படி கரைச்சல் ஒருவாறு கரைந்தொழிந்தது.

மறைமலையடிகளார் நூல் நிலையத்தையும், அடிகளார் வாழ்ந்த வளமனையைக் கலைமன்றமாக்கி அதனையும் சிறப்புற நடத்திவரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அடிகளார் நூல்களைத் தனிச் சிறப்புடன் பொலிவுற அச்சிட்டுத் தொடர்ந்து பல பதிப்புக்களை வெளியிட்டு வருகின்றது. அடிகளார் அவ்வப்போது தாளிகை (பத்திரிகை)களில் எழுதி வெளியிட்டனவும், துண்டு வெளியீடு

*குடியரசுப் பதிப்பக வெளியீடு : 26.

களாக வெளியிட்டனவும் ஆகியவற்றைத் தொகுத்து மறைமலை யடிகளார் அறிவுரைக் கோவை, கட்டுரைக் கோவை, கருத்தோவியம், பாமணிக்கோவை என்னும் நூல் வடிவில் உருவாக்கி வெளியிட்டுள்ளது. மறைமலையடிகளார் கைவண்ணம் என்னும் நூலையும் வெளியிடும் பொருட்டு அணியப்படுத்தி வைத்துள்ளது.

அடிகளார் பிறந்த நகரமான நாகப்பட்டினத்தில் நாகைத் தமிழ்ச் சங்கத்தார் அடிகளாருடைய திருவுருவச் சிலையை நிறுவி யுள்ளனர். மேனாள் முதலமைச்சர் கலைஞர் **அருட்செல்வனார்** (கருணாநிதி) அவர்கள் சைதாப்பேட்டையிலுள்ள பெரும்பாலத்திற்கு **மறைமலையடிகள் பாலம்** என்று பெயர் சூட்டியும், புதியதாக **மறைமலைநகர்** உருவாகி வளர்ந்தோங்கி வருவதற்கு வித்திட்டும் மகிழ்ந்தார்.

பல்கலைக் கழகத்திற்கு அடிகளார் பெயர் சூட்டப்பட வேண்டும். பல்கலைக் கழகங்களின் எல்லையிலும் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை மாநகரிலும் அடிகளார் திருவுருவச் சிலை நிறுவப்படல் வேண்டும். இவையெல்லாவற்றையும் விட, அடிகளார்தம் அருங் கருத்துக்கள் பரவும் வண்ணம் ஆவன செய்வதே தலையாய இன்றியமையாப் பெரும் பணியாகும்.

இங்குக் கூறியுள்ள கருத்துக்கள் நாம் பன்முறையும் எடுத்துக் கூறி வலியுறுத்தியனவே யாகும். ஆயினும் பயனொன்றும் விளையாமை வருந்துதற்குரியது. சிவராமசேதுப்பிள்ளை யவர்கள் போலும் உண்மைத் தமிழ்ப்பற்றாளர்கள், தகுதி வாய்ந்தவர்கள் இப்போது யாரும் இல்லை. தமிழுணர்வால் அவருடைய இடத்தை நிரப்புவாரும் இலர்.

பொருளாழ மற்றனவும் புல்லிய நடையினவும் இன்னோரன்ன பிறவுமாக எத்தனையோ நூல்கள் புதுமை என்னும் பெயராலும் பதவி, அதிகாரம் முதலிய சாய்கால்களினாலும் மாணாக்கர்கள்மீது பாடமாகச் சுமத்தப்படுகின்றன. தாந்தாம் எழுதிய நூல்களை எப்படியாவது பாடமாக வைத்து அதன் வழியாகவும் பொருள் திரட்டிக்கொள்ள எத்தனையோ பேர் முனைந்து நிற்கின்றனரே யன்றி அடிகளார் நூல்களைப் பாடமாக வைக்க அக்கறைகொள்வோர், பரிந்துரைப்போர் இலர்.

கடந்த சில ஆண்டுகளாக மறைமலையடிகளார் நூல்கள் பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப் படாதது பெரிதும் வருந்துதற்குரியது. இதனைப் பல்கலைக் கழகப் பாடநூற் குழுவினரின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, வரும் ஆண்டுகளில் அடிகளார் நூல்களைப் பாடமாக வைத்து மாணாக்கர்க்குத் தனிச் செந்தமிழின் மாட்சியையும், பல்துறை யறிவையும் அறிவுறுத்தி உணர்வூட்டுமாறு வேண்டுகின்றோம்.

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ருக, பரல் எ, கூஉசுஆம் பக்கத் தொடர்ச்சி)

பன்னிரண்டாம் நூற்பா

இந் நூற்பா, வழிபாடு பற்றிக் கூறுகிறது. வழிபடும் இடங்கள் இன்னவை என்பது முன் நூற்பாவில் வந்தது. அடியார்களின் திருவேடமும் திருக்கோயிலும் ஆக இரண்டு, வழிபடும் இடங் களாகக் கூறப்பட்டன.

மல வீடு பெற்றுச் சிவப்பேறு அடைந்த 'சீவன் முத்தர்'களுக்கு, மேலும் வழிபாடு தேவைதானு என்று தோன்றும்.

'சீவன் முத்தர்'களின் அறிவும் அன்பும் செய்கையுமெல்லாம், வீடுபேற்றுக் காலத்திற் பேரின்ப வண்ணமாய் உள்ளன. இந் நிலையில், வழிபாடு என்பது என்ன? அது எதற்கு? திருவேடங் களிலும் திருக்கோயில்களிலும் மட்டும் இறைவனுக்கு என்ன இயைபு? எல்லாப் பொருள்களுக்கும் பெருமான் அப்பாற்பட்டவன் என்பது எப்படிப் பொருந்தும்?' என்றெல்லாம் நினைவுகள் எழும்.

சிவபோகமாகிய பேரின்பத்திலேயே உயிர்களின் அறிவும் இச்சையும் செயலுமெல்லாம் விளங்கி ஒன்றியிருந்தாலும், அச் சிறப்பை உடலோடு கூடியிருக்கும் 'சீவன் முத்தர்கள்' பொறிகள் வழியிலும் காண்பது இயல்பு. உடல் இருப்பதனுல், ஒரோவொரு கால், சிவநிட்டையிலிருந்து விழித்து, உடலின் இயக்கத்துக் காகவும் நலத்துக்காகவுமேகூடப் பொறிகள் முதலிய கருவிகளில் ஈடுபடுதல் கூடும். அப்படி ஈடுபடும்போது, திருவேடமும் திருக் கோயிலும் அவர் அன்புருக்கத்தில் எழுதல் இயல்பு. அவை, காதலர் அன்பைப் பெருக்குதற்கு, ஆடை அணிகலன்கள் சந்தனம் மலர்கள் முதலிய அறியாமைப் பொருள்கள் பயன்படுவதைப்போலப் பயனுகும்.

மேலும், சீவன் முத்தர்கள் பொறிவழிப்படும்போது உலகியலை நுகர்ந்த பழைய அறிவு இச்சை செயல்கள், அருளால் வாழ்க்கை நிகழும் இக்காலத்தில் தலைப்பட்டு விடாதபடி, இவ்விரண்டிடங் களின் வழிபாடுகள் உதவி செய்யும். அவ்வாற்ருல், 'நிட்டை' என்னும் சிவக்களத்திலும், உடலோடு கூடிய வாழ்க்கை நிலை

யிலும், ஒரே அருள் உணர்வாய்ச் 'சீவன் முத்தர்கள்' இருப்பார்கள்; இறைபணிகளும் அருளால் நிகழும்.

இரண்டு இடங்களைமட்டும் வரையறை செய்தது ஏனென்றால், திருக்கோயிலும், திருவேடமுடைய அடியார்களும், 'அறியாப் பொருள் அறிவுப் பொருள் என இரு வகையாக இருத்தலால்', வகைக்கு ஒன்று கூறப்பட்டன. அதோடு அவை இங்ஙனம் அறிவில்லாதன அறிவுள்ளன என்பனவாய்க் காணப்படுகின்ற இரண்டிடங்களிலும் இறைவன் கலந்திருப்பதுபோல் நினைவு தோன்றிச் செயலுறும். உலகம் இவ் விருவகையில் இயங்குதலால், உலகமெல்லாம் அருட் பார்வையில் அடங்கும். இவ் விரு வகை வழிபாடுகளுக்கும் ஞானிகள் திருக்கூட்டம் உதவி செய்கிறது. 'அன்பரொடு மரீஇ வேடமும் ஆலயமும் தொழும்' என்று நூற்பாவில் வந்தமை நினைவு கூர்க.

''செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ,
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே''

என்பது நூற்பா.

நூற்பாவின் பொருள் :

செந்தாமரை மலர் போன்ற வலிய திருவடிகள் சேர்தலைக் கெடுக்கும் அந்த மலங்களை நீக்கி, அடியார்களோடு சேர்ந்து, வாதனை மயக்கமும் அறும்படி அன்பு நிறைந்து, அவர் திருக்கோலமும் ஆலயமும் சிவனெனவே 'சீவன் முத்தர்' தொழுது வருவர்.

செந்தாமரை மலர் போன்ற திருவடிகள் என்றது, அவற்றின் செம்மை நலமும் கருணை நிறைந்த மலர்ச்சி வளமுங் காட்டும் பொருட்டு. செம்-செம்மையையும், தாமரை மலர்-கருணை மலர்ச்சி யையும், காட்டின. தொன்மையிலிருந்தே மிக்க பொறுமையுடன் உயிர்களின் நிலைமைகளைக் கடைசி வரையில் பொறுத்து வந்த திருவடிகளாதலின், 'நோன் தாள்' என்றார்; நோன்-பொறுமை; அத்தகைய தாளைச் சேரலொட்டாதபடி செய்த மலமாதலால், 'அம் மலம்' என்று சுட்டிக் கூறினார்; சுட்டுதலால், அழுத்திக் கூறுதல் பெறப்பட்டது. அவ்வளவுக்குத் தீயமலம் என்பது கருத்து. கழீஇ-ஞான நீராற் கழுவி; 'ஞான நீரால்' என்று வெளிப்படையாய்க் கூறுமையால், இது, குறிப்புருவகம். 'தீக்கை' என்று சொல்லு வதற்குக் 'கழீஇ' என்றார். நீக்கி, அன்பரோடு மருவவேண்டும்.

பாசவீடு முன்னரே பத்தாம் நூற்பாவில் வந்தது. பதினோராம் நூற்பாவுக்குரிய சிவப்பேறு என்பது, அன்பரொடு மருவுதலுமாத லால், உடனிகழ்ச்சியாய்க் கூறப்பட்டது. அதனாலும் 'கழீஇ' என்னும் குறிப்பாலும் சிவப்பேற்றை எய்திய 'சீவன் முத்தர்க்கு', வாதனையாய் ஒட்டிக்கொண்டிருக்கும் மும்மலங்களையும் கழுவுதல் பெறப்பட்டது. அன்பரொடு மருவுதலால் இவ்வாறு நேர்தலின், 'மரீஇ' காரணப் பொருளது.

பழைய அடியாரை இந் நூற்பா 'அன்பர்' என்று கூறியது இங்கு நினைவு கூர்தற்குரியது. இறைவன் உருக்கத்திலேயே இருக்கும் பழைய அடியார்கள் அவர்கள். புதிதாகச் சிவப்பே றடைந்த 'சீவன் முத்தர்க்குப்' பழைய அடியார்களாகிய பெரிய 'சீவன் முத்தர்கள்' உதவியாயிருப்பர்; "ஈசன் பழவடியீர் பாங் குடையீர், புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல் லாதோ எத்தோ நின் அன்புடைமை" என்று மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் இவ் வுதவி தெரிகின்றது. (திருவெம்பாவை, 3.) மால் அறும்படி நேயம் மலியவேண்டிப் புத்தடியார், நேயம் மலிய வேண்டியிருப்பதனால், 'மால் அற' என்னுந் தொடரும், 'மலிதல்' என்னும் சொல்லும் இங்கே வந்தன. புத்தடியார் செய்கையாக இதனைக் கூறிக்கொள்ளுதல் நன்று. மலங்களின்வழி மயங்குதல் இங்கு 'மால்' எனப்பட்டது.

மலங்களின்பால் பற்று அறுதல், இந்த இறை நேயம் ஒன்றினால் மட்டுமே முடியும். நேயம் கொள்ளுதல் ஒரு நிகழ்ச்சி; நேயம் மலிதல் ஒரு நிகழ்ச்சி. 'ஏகனாகி இறைபணி நிற்றலால்' நேயங்கொள்ளுதல் தெரிந்தது. அவ் வழியே, கண்டு காட்ட லாலும், உயிர்களைக் கடைசி வரையில் ஈர்த்தலிற் சலிப்பில்லாமல் நிற்றலாலும், நோன் தாள் உடையனாதலாலும், இத்தகை இறை வனது கருணையை எண்ண எண்ண உருக்கம் முதிர்ந்து நேயம் மலியும.

ஆலயந்தானும்-ஆலயமும் கூட; வேடத்தையும் திருக்கோயில் வடிவையும் உலகப் பொருள்களாக நினைந்து விடாமல் அரனென்னும் உணர்விலேயே தொழவேண்டும் என்பதற்கு 'அரனெனத் தொழுமே' என்றார். 'தொழுமே' என்னும் ஈற்று ஏகாரம் இரக்கமும் மதிப்பும் கருதியது. சிவஞான உணர்வில், ஞானிகளாகிய சீவன் முத்தர், பாலர்களைப் போலவும் இருப்பா ராதலின் 'தொழும்' என்று அஃறிணையாற் கூறினார்.

இந் நூற்பாவுக்குச் சிந்தனையே யில்லாமல் இயல்பாய் விளங்கும் சிவபெருமானை வேடமும் திருக்கோயிலுமாகிய உலகப்

பொருள்களில், தமக்கு உதவி செய்யும் சிந்தையுடைய சிவன் போலக் காண்டலின், 'அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று' என்று ஆசிரியர் கருத்துக் கூறினார்.

இந் நூற்பா, 'செம்மலர் நோன்றாள், சேரல் ஒட்டா அம்மலங் கழீஇ' என்பதும், 'அன்பரொடு மரீஇ' என்பதும், 'மாலற நேயம் மலிந்து அவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்பதும், மூன்று பிரிவுகளாக (அதிகரணங்களாகக்) கூறியபின், ஆசிரியரே முடிபுரையாக, 'வழிபடாமை ஒழிக' என்று நான்காவது பிரிவாக வகுத்துக் கூறினார்.

முதல் பிரிவு :

மலங்களைக் களைதல் பற்றி இப் பிரிவு வந்தது. இறைவன் திருவருள் கொண்டுதான் மலத்தைக் களைதல் வேண்டும். இதைக் களைந்துகொண்டு மேலும் திருவருள் நிறைந்து முற்றும் வாதனை யும் நீக்குதல் வேண்டும். முதலில் திருவருள் பெற்றுப் பாசவீடு செய்தலைப் பத்தாம் நூற்பாவிலும், சிவப்பேறடைதலைப் பதினோராம் நூற்பாவிலும் கூறியபின், வாதனையையும் ஒழித்தலை இப் பன்னி ரண்டாம் நூற்பாவில் ஆசிரியர் தெளிவித்தார்.

'மலங்கழீஇ' என்றது மும்மலங்களையும் கழீஇ என்றபடி. இதனால் ஆசிரியர் முதல் பிரிவின் மேற்கோளை ஆணவ மாயை கான்மியம் என்னும் மலங்களைக் களைக என்று மேற்கோளிற் கூறிக்கொண்டார்.

திருவருள் திறத்தால் ஆணவம் வரவர ஆற்றல் குறை கின்றது; விரிவதில்லை.

கருவிகளாக, மாயை வர வர விரிவடைகிறது. மூலப் பொரு ளாக இருப்பதற்கு 'மாயை' என்று பெயர். விரிவடையும் கருவி களுக்கு 'மாயேயம்' என்று பெயர். ஆணவத்தைக் கலைத்து அறிவை விளக்குவதற்காகப் பிறவிகளில் உடலும் உலகமுமாய் இறைவனால் தரப்பட்டன.

அப்படியே கன்மமும் விரிவடைகிறது. மூலப்பொருளுக்குக் 'கன்மம்' எனவும், விரிவடையும் இருவினைகளுக்குக் 'கான்மியம்' எனவும் பெயர். இரண்டையும் 'கான்மியம்' என்பாரும் உண்டு.

இவையும் திருவருள் திறத்தால் அளவறிந்து அவ்வப் பிறவி களிலும் சேர்க்கப்படும்.

சீவன்முத்தர்க்குப் 'பிராரத்துவம்' என்னும் உடலூழ் மட்டும் உண்டு. 'சஞ்சிதம்' என்னும் தொகுப்பு வினை குரு தீக்கையில் அழிந்துவிட்டது. 'ஆகாமியம்' என்னும் மேல்வினை உயிர் பெற்ற சிவஞானத்தால் உண்டாகாமறபோம்.

சீவன் முத்தர்க்கு உடலூழும், திருவருள் துணையால், மெலிந்தே நிகழும். அந் நிகழ்வு, உயிரையோ, சிவஞான உணர்வையோ, பேரின்ப நுகர்வையோ பற்றுவதில்லை. சிவஞான உணர்வின் முறுக்கத்தினுலேதான் உடலூழ் வலிமை கெட்டு மெலிந்து, ஒப்புக்குத் தாக்குவதுபோல் வருகிறது; பெரும்பாலும் தாக்குவதும் இல்லை. 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்றது தமிழ் மறை; 'உப்பக்கம்' எதிர்ப்பக்கம்; 'உலைவின்றித் தாழாது உஞற்று பவர்க்கு' அருகில், விறைப்பாக வந்து தோன்றுமே யன்றிப் பெரும்பாலும் தாக்காது; ஒரோவொருகால் நாக்கினுலும் மெலிந்து தாக்கும்; தாக்குவதாகவே தெரியாது;

இங்கே, ஒன்று முதன்மையாகக் கருதவேண்டும்; மறைநூல், 'உஞற்றுதல்' என்றது, 'அசத்துப்' பொருள்களாகிய உலகப் பொருள்களிலேயே உஞற்றுதலன்று; 'மெய்யுணர்வில்' உஞற்றுத லாகும்; ஏனென்ருல், 'முயல்வார்' என்று, அது, 'தவம் செய் வாரைக் குறித்தது. 'முயல்வாரு ளெல்லாம் தலை' (47) என்னும் அத் தமிழ் மறையின் வாய்மொழியினுலேயே அது துணியப்படும்.

தவ நிலையில், உடல் முதலிய மாயேயங்களும் கழிவு நிலையில் இருக்கின்றன. இன்ப துன்பங்கள் விளைக்கும் இருவினைகளும் உடலூழ் மட்டுமாய் நின்று மெலிந்து போயின; ஆணவ மலமும் நைந்த நிலையில் உள்ளது. ஆதலால், அம் மும்மலங்களையுங் களைதற்கு எளிதான வழி, அன்பரொடு கூடி அவர் திருவேடங் களையும் திருக்கோயிலையும், தொடர்ந்து வழிபடுதலேயாகும்.

> "புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமும்,
> மண்முதல் மாயைகாண் மாயையும்,—கண்ணிய
> அஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமும் இம்மூன்றும்
> மெய்ஞ்ஞானிக் காகா விடு."

பொருள் :

புண்ணியம் பாவம் பொருந்தும் இக் கான்மியமும்—புண்ணிய மும் பாவமும் பொருந்தும்படி இருவினையாய்ச் செய்யும் இக் கான் மியம் என்னும் மலமும், இதற்கு மூலமாயிருக்கின்ற கன்ம மலமும்;

மண்முதல் மாயைகாண் மாயையும் - நிலம் முதலாக மாயை வரையிற் காணப்படும் 'மாயேயமும், மாயை' என்னும் மூலமாயை மலமும்;

கண்ணிய அஞ்ஞானங் காட்டும் இவ்வாணமும் - சுட்டி அறித லாகிய அறியாமையைப் புலப்படுத்தும் ஆணவமும் (என இம் மும் மலங்களும்).

மெய்ஞ்ஞானிக்கு ஆகா விடு - மெய்ஞ்ஞானிகளாகிய சீவன் முத்தர்களுக்கு ஆகாமையால் அவற்றை விட்டொழிக.

இந்த மூன்று மலங்களும் ஞானத்தை உணர்த்துவதில்லை; அஞ்ஞானத்தையே உணர்த்தும். ஆதலால், 'மெய்ஞ்ஞானிக்கு ஆகா விடு' என்றார். புண்ணிய பாவம் என்னுமிடத்தில் புண்ணியம் என்பது ஈற்று மகரம் விகாரத்தால் தொக்கது. 'கான் மியம்' என்றதனால் மாயேயமும், 'மாயை' என்றதனால் கன்மமும் பெறப்பட்டன.

'கான்மியம்' என்னும் கன்மத்தின் விரிவாகிய புண்ணிய பாவங்கள் என்னும் இருவினைகளும் 'திரோதை'யின் செயலுக்குச் சிறப்பு. ஆகவே 'ஆணவம்' 'மாயை' 'மாயேயம்' 'கன்மம்' 'கான் மியம்' (திரோதை) என மலங்களை, 'ஐந்து வகை மலங்க'ளாகக் கூறுவதும் உண்டு.

மண்முதல் இருபத்து நான்கு தத்துவங்களும், புருடன், அராகம், வித்தை, நியதி, கலை, காயம், மாயை என்னும் ஏழு தத்து வங்களுமாக 31 தத்துவங்களுக்கும், மூலமாயிருப்பது 'அசுத்த மாயை' ஆகும். ஆகவே, மாயை என்பது 24 தத்துவமாகிய பிர கிருதி மாயையைக் குறிக்காது. முப்பத்தோராம் தத்துவமே 'மாயை' என்பது; இருபத்து நான்காவது தத்துவமாகிய 'பிரகிருதி மாயை' என்பது, 'மூலப் பிரகிருதி' அல்லது 'மூலப் பகுதி' எனப் படும். இதைக் 'குண தத்துவம்' என்பதும் உண்டு;

> *''குணவடிவாய் மூலப் பிர கிருதி''* (சித். சுபக். 2 : 57)

இதனையே சித்தம் என்றும் சொல்லுவதுண்டு.

> *''சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனை யதுவும் செய்யும்''*
> (சித்தியார். சுபக். 2 : 58)

கண்ணிய அஞ்ஞானம் - சுட்டி அறியும் அஞ்ஞானம்; இக் கான்மியமும் இவ் வாணவமும் என்பதுபோல் இம் மாயையும் என்று சுட்டு வருவித்துக்கொள்க. மெய்ஞ்ஞானி என்றது இங்கே 'சீவன் முத்தரை'.

ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களையும் களைதல் என்ற மேற்கோளுக்குக் காரணம், 'அவை தாம் ஞானத்தை

உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்துமாகலான்' என்பது. இவ்வாறு இப் பிரிவுக்கு ஆசிரியர் ஏதுக் கூறினர்.

செய்யுள், விளக்கச் செய்யுளாய் அமைந்தது. 'கான்மியம்' என்னும் விரிவைப் புண்ணிய பாவம் ஆகிய இரு வினைகளாகவும், மாயேயம் என்னும் விரிவை மண்முதல் மாயை என 31 கருவி களாகவும் காட்டினர். அசுத்த மாயையின் விரிவுக் கருவிகளில் ஒன்று மாயை. இவற்றின் மூலம் அசுத்த மாயை; அதற்கு 'மோகினி' என்னும் பெயர். அது தோன்றும்படி 'மண்முதல் மாயை' என்றதோடு, 'மண்முதல் மாயை காண் மாயையும்' என்றார். சிவஞான முனிவர், "முன் வந்த மாயை, முப்பத்தோராம் எண்ணு முறைமைக் கண் நின்ற தத்துவத்தை உணர்த்தி" என்றதோடு "தன்னை ஈருக உடைய" என்றுங் கூறுவர். (சிற்றுரை, சிவஞான போதம், 12 : 1) ஆதலின், மீண்டும் 'மாயை'யென்றது 'மாயே யத்தை' உணர்த்தும்.

'கண்ணிய அஞ்ஞானம் காட்டும்' என்பது, ஆணவத்தின் இயல்பு. சிவயோகப் பெருவாழ்வை இம் மூன்றும் இழப்பித்தலால், 'சீவன் முத்தராய்' இருப்பவர்க்கு இவை ஆகா என்று சொன்ன தோடு, சிறிது இடங்கொடுத்தால் மேன்மேலும் இவை பெருகி வருமாதலால் 'தற்போதத்தைக் கொடுத்துச் 'சிவபோகத்தை' மாய்த்து விடும் என்னும் முறுக்கம் காரணமாக 'விடு' என்றும் ஆணை தந்தார். வாதனை மேல்மேல் முறுகுமாதலால் அதற்கு இடங்கொடாமல் விட்டொழித்து எல்லாவற்றையும் இறைபணியாக மாற்றிக்கொண்டு ஞான நிட்டையிலேயே நிலைக்கவேண்டும் என்பது இம் முதற் பிரிவின் கருத்தாயிற்று.

'கான்மியம்' 'மாயை' 'ஆணவம்' என முறைப்படுத்தியது. உடலூழ் ஒன்று கொண்டே இவை முறையே தொடரக் கூடு மாதலால் என்பது.

மும்மலங்களின் இயல்பு 'சீவன் முத்தி' நிலையில் ஒரோவொரு கால் வாதனையாக வந்தாலும் அதனைத் தழுவலாகாது, இயல்பு தான் என்று உணர்வுக்கு இடம் விடலாகாது, என்பது இதனால் தெரிந்தது.

இரண்டாம் பிரிவு :

இதற்குச் செய்யவேண்டுவது சிவனடியார்களோடு கூடிய படியே இருத்தல். ஆதலால், 'சிவபக்தர்களோடு இணங்குக' என்று ஆசிரியர் மேற்கோள் கூறினர்.

அல்லாதாரோடு இணங்கினுல் அவரெல்லாம் அஞ்ஞானத் துக்கே இழுத்து விடுவாராதலால் அவரோடெல்லாம் கூடலாகாது என்று, 'அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவோராகலான்' என்று காரணமும் கூறினர்.

இங்கே ஒரு நினைவு எழும் 'இவர் உறவினர், இவர் பகைவர் என்னும் பேதமில்லாதவர் அல்லரோ சீவன் முத்தர் ! அத்தகைய பெரியோர், சிவனடியார் சிலரிடம் மட்டும் சேர்வதும் அல்லாதா ரோடு நட்புக் கொள்ளாமையும் பொருந்துமா' என்பது.

இங்கே யாரையும் 'சீவன் முத்தர்' வெறுப்பவரில்லை. பார்ப்பதும் கேட்பதும் அவர்க்காகப் பரிவுரைப்பதும் இங்கே தடை செய்யவில்லை. யாரையும் பார்க்கலாம், கேட்கலாம், பரிவுரைக்கலாம், இவ்வாற்ருல் உதவலாம்; ஆனல், அவரோடு இணங்குதல் மட்டும் கூடாது. இணங்கினுல் மட்டுந்தான் நடுநிலையைக் கடைப்பிடித்த தாக ஆகும் என்று கருதுதல் கூடாது; அல்லாதாரால் தமது சிவஞான நிலை தளர்ந்துபோதல் ஆகாது. அல்லாதார்க்கு நடுநிலை மேற்கொண்டு நலம் புரிவதாய் இருக்க வேண்டுமானல், 'சீவன் முத்தர்கள்', தம்மினும் சிறந்த சிவஞானிகளாகிய பெரியோர் களுடன் கூடி, அவர் திருவேடத்தையும் திருக்கோயிலையும் வணங்கிக்கொண்டு, அச் சிவஞான உணர்விலேயே முறுகி நின்று மும்மலங்களையும் களைந்து, அத் திருவருட்பேற்ருல், அல்லாதார் முன்னேற்றத்திற்கும் இறைவனைப் போல் இறைபணி செய்து வருதல் தக்கது.

> *''மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்*
> *சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்*
> *பத்தர் இனத்தாய்ப் பரனுணர்வி ஞல்உணரும்*
> *மெய்த்தவரை மேவா வினை.''*

பொருள் :

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்—சிவஞானப் பார்வையை மறக்கும்படி செய்து தங்களை மலங்களால் உண்டாகும் பிறவிகளில் தள்ளுகின்ற, சிறப்பில்லார் தம் திறத்துச் சேர்வை அற—ஞானச் சிறப்பில்லாத கீழோர் வகையில் சேர்க்கை நீங்கும்படி; பித்துப் பத்தர் இனத்தாய்-அன்பு சிவனடியார் இனத்திற் கொண்டு; பரன் உணர்வினுல் உணரும் மெய்த்தவரை-அருள் உணர்வினுல் எல்லாவற்றையும் உணர்ந்து வருகின்ற மெய்ப்பொருளைப் பற்றிய தவமுடைய அடியவரை; வினை மேவா-உடலூழும் தாக்காது.

(தொடரும்)

உயிர்மெய் வரிவடிவுகளின் ஓரியலின்மை

[ஞா. தேவநேயன்]

தொடக்க வகுப்பில் எழுத்து எழுதிப் பயிலும் சிறுபிள்ளைக்கு, க, கா; ங, ஙா; ச சா; ஞ, ஞா; ட, டா; என்று எழுதிக்காட்டி, ணவ்விற்கு அடுத்த எழுத்தை எழுதச் சொன்னால், 'ணா' என்று தான் எழுதும். இதனால், ஓரியலாக எழுதுவதே இயற்கை யென்றும், முந்திய வகையென்றும், சிறுபிள்ளைக்கும் சொல்லாமலே தெரியும் என்றும், அறிந்துகொள்ளலாம்.

இவ் வியற்கை முறையை மாற்றி ஏன் 'ணு' என்று எழுதினர் முன்னோர் அல்லது இலக்கண ஆசிரியர் எனின், கூட்டெழுத்தில் அல்லது விரைவெழுத்தில் ணவ்வடிவுங் காலுஞ் சேர்த்தெழுதின், காலும் ஒரு கோணச் சுழிபோல் தோன்றி ணகர ஆகாரத்தை இரு ணகரமாகக் கருதி மயங்க இடந்தரு மாதலின், அதை நீக்குதற்கே என்க.

இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஔ என்னும் ஏழுயிரும் ஏறும் ணகர மெய் வடிவுகள், அத்தகைய மயக்கத்திற்கு இடந்தராமையால், தி, தீ, து, தூ, தெ, தே, தௌ என்பன போன்றே ணி, ணீ, ணு, ணூ, ணெ, ணே, ணௌ என்று இயற்கையான முறையில் எழுதப் படுகின்றன.

ஐகார வுயிர்மெய்க்கு னகரம்போல் தோன்றும் இரட்டைக் கொம்பும், ஒகர ஓகாரமெய்கட்குக் கொம்புங் காலும், இயற்கை முறையில் வரின், பல சுழிகள்போல் தோன்றி மேற்கூறிய மயக் கத்தை மிகுக்குமாதலின், அவ் வுயிர் மெய்கள் ணை, ணொ, ணோ என்று வேறுபட்ட வடிவில் எழுதப்படுகின்றன.

இரு அல்லது முக் கோணச் சுழியெழுத்துக்கள் போன்றே இரு வளைவுள்ள எழுத்துக்களும் சிலவிடத்து மயக்கந் தருவனவாயிருத் தலால், அத்தகைய இடங்களில் அவையும் இயற்கைக்கு மாறான வடிவில் எழுதப்படுகின்றன.

றகர வடிவு இருவளைவுள்ளதா யிருந்தும், ஏன் ஐகார வுயிர் மெய் வடிவில், றை என்றே இயற்கை வடிவில் எழுதப்படுகின்ற தெனின், அதற்குக் கோடு கீழிறங்கியிருப்பதால் மயக்கத்திற்கிட மில்லாது தடுக்கின்ற தென்க. இதனால், இன்றியமையாத இடங்

களிலேயே ஐகார வுயிர்மெய்க்குக் கொக்குக் கழுத்துப் போன்ற மேற்கொடுக்குக் கொண் டிருக்கின்றனர் என்பதை அறிக.

இனி, ஆங்கிலத்தில் இல்லாத உயிர்மெய் யெழுத்துக்கள் தமிழில் இருப்பதால், எழுத்துக்கள் பல்கித் தட்டச்சடிப்பில் மிகுந்த இடர்ப்பா டுண்டாக்குகின்றன வென்றும், தொலைவரி யடிப்புக் காலத்தை நீட்டிக்கின்றனவென்றும், குறைகூறித் தமிழெழுத்துக் களைக் குறைக்க வேண்டும் என்பர் சிலர்.

வடமொழி நெடுங்கணக்கிலும் அதைப் பின்பற்றிய வடநாட்டு மொழிகளிலும் திராவிடமொழிகளிலும் உள்ள வண்ண மாலைகளி லும், வல்லினம் ஐந்தும் நந்நான்கு வகையா யிருப்பதொடு, சகரத்திற்கினமான இசுப் பொலிகளும் (Sibilants) மூன்றாக வுள்ளன.

உயிர்மெய்களின் உகரக்குறி, எழுத்து வடிவிற்கேற்பத் தெலுங்கிலுங் கன்னடத்திலும் இருவேறு வகையாயும், மலையாளத் தில் நால்வேறு வகையாகவும் உள்ளது.

சேமிய மொழிகளில் உயிர்மெய்க்குத் தனிவடிவில்லாவிடினும், மெய்வடிவு சொன் முதலிடைகடை யென்னும் மூவிடத்திற்கேற்பப் பெரும்பாலும் வேறுபடுகின்றது. மேலும், பற்பல எழுத்துக்களின் வடிவுகள் ஒவ்வொன்றாகவே யிருந்து, புள்ளிகளின் மேல்கீழ்உள் என்னும் இடவேறுபாட்டாலும், ஒன்று இரண்டு மூன்று நான்கு என்னும் தொகை வேறுபாட்டாலுமே, வேறு பகுத்தறியப்படுகின் றன. இனி, அ இ உ என்னும் முதன் மூவுயிர்க்கும் தனி வடிவு களில்லையென்று கருதப்படுகின்றது. ஒரு குறுங்கீச்சு மேலும் கீழும் தடித்தும் எழுதப்படுவதால், முறையே முதன் மூவுயிர்க் குறில்களும் குறிக்கப்படுகின்றன. அவற்றின் நெடில்களைக் குறிக்க ‘அலிப்’ (அலெப்), ‘வா,’ ‘யே’ என்னும் எழுத்துக்கள் முறையே சேர்க்கப்படுகின்றன, ‘வா’ என்னும் ஒரேயெழுத்து வகரமாகவும் உகரமாகவும், ‘யே’ என்னும் ஒரேயெழுத்து யகரமாகவும் இகரமாக வும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆங்கில வண்ணமாலையின் ஒழுங்கின்மை அனைவரும் அறிந்ததே.

"In the English tongue we speak
Why is break not rhymed with freak
Well you tell me why it's true
We say sew but likewise jew.

"Beard sounds not the same as heard
Cord is different from word
And since pay is rhymed with say
Why not paid with said I pray.

"Cow is cow but low is low
Shoe is never rhymed with foe
And in short it seems to me
Sound and letter disagree."

என்று Lord Cromer என்னும் ஓர் ஆங்கிலப் பெருமகனாரே பாடியுள்ளார். ஆயினும், ஒருவரும் அதைத் திருத்தக் கருதவில்லை. ணை, னை, றை, ரை என்னும் எழுத்துக்கள் ஈரிடமே கொள்கின்றன. இவற்றை ணொ, னொ, றொ, ரோ என்றெழுதின் மூவிடங் கொள்ளும். கால் சேர்க்காமையால் அவை முடம்பட்டு நடக்க முடியாது வருந்தவுமில்லை; கால்வேண்டுமென்று நம்மிடம் முறையிடவுமில்லை.

எழுத்து மாற்றம் எவ் வகையிலுந் தமிழுக்குத் தேவையேயில்லை.

இன்று எழுத்தை மாற்றின், மனையகங்களிலும் அலுவலகங்களிலும் நூலகங்களிலுமுள்ள கோடிக்கணக்கான மரபெழுத்து நூல்களையெல்லாம் மாற்றியாகல் வேண்டும். அவற்றிற்கு ஈடு செய்ய இறைவனும் வரான், புதிய மாற்றெழுத்து நூல்களையெல்லாம் அச்சிட ஒரு தலைமுறையாகும்; கோடிக்கணக்கான பணமுஞ் செலவழியும். அவற்றைக் கொடுக்கும் வள்ளல்கள் இனிமேல்தான் பிறக்க வேண்டும்.

ஏற்கெனவே யுள்ள நூல்களை வேண்டுமாயின், கரிவலம் வந்த நல்லூரிற்போல் எரியூட்டுவதற்குத் தோன்றியங்கள் (ஆகமங்கள்) துணைசெய்யலாம். ஆயின், அதற்கும் ஆரியமறை யோதுவார்க்குப் பணங்கொடுத்தல் வேண்டும்.

எழுத்து மாற்றுவதால் ஒரு நன்மையுமில்லை. கேடோ அளவற்றதாகும்.

இனி, எழுத்து மாற்றமும் ஒருவகைப்பட்டதன்று. பெரியார் எழுத்துமுறை ஒன்று; புலவர் குழந்தை எழுத்துமுறை ஒன்று; பிறர்கூறும் எழுத்துமுறை வெவ்வேறு. உயிர்மெய் வரிவடிவுகளை, ஒருவர் கிரந்தம்போற் புணர்க்க வேண்டும் என்பர்; ஒருவர் வடமொழிபோற் புணர்க்கவேண்டும் என்பர்; ஒருவர் பிராமிபோற்

புணர்க்கவேண்டும் என்பர்; பிறர் வெவ்வேறு வகையிற் புணர்க்க வேண்டும் என்பர். ஒருசிலர் உயிர்மெய்யே வேண்டியதில்லை யென்றும், ஆங்கிலம்போல் மெய்யையும் உயிரையும் அடுத்தடுத் தெழுதினாற்போதும் என்றும் கூறுவர்.

இங்ஙனம் வடிவுபற்றிய கருத்து வேறுபாடுகள் ஒருபக்கம் இருக்க, சிலர் பிறமொழிச் சிறப்பெழுத்துக்களைத் தமிழிற் புகுத்த வேண்டுமென்பர். அவரும், வடமொழிச் சிறப்பெழுத்துக்களை மட்டும் புகுத்த வேண்டும் என்பாரும், ஆங்கிலச் சிறப்பெழுத்துக் களையும் புகுத்த வேண்டும் என்பாரும், பிறமொழிச் சிறப்பெழுத்துக் களையுஞ் சேர்க்கவேண்டும் என்பாருமாய்ப் பல திறத்தர்.

பாண்டியர் முதலிரு கழகம் போன்ற தொன்றின்மையால், இங்ஙனம் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் வரம்பின்றிப் பாழாக்கப் பட்டு வருகின்றன.

இன்று எழுத்து மாற்றத்தை விரும்புவார் தகுதி நோக்கின், பெரும்புலமையும் மரபுகாக்கும் பொறுப்புத்தன்மையும் ஒருவர்க்கு மில்லையென்றே தெரியவரும்.

தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்

10, 11-6-1934 அன்று, திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழர் முதல் மாநாட்டில் தலைமை தாங்கி, ஆற்றிய சொற்பொழிவில் ஒரு பகுதி வருமாறு:

> ''பழந்தமிழ்க்காலமுதல் வடசொற்களும் திசைச்சொற் களும் தமிழில் இன்றியமையாதவிடத்து வழங்கி வந்திருக் கின்றன. ஆனால் அவ்வாறு வழங்கி வருகின்றபோது, அவை தமிழியலுக்கு ஏற்ப உருமாறித் தொழில்புரிய வேண்டு மென்பது ஆன்றோர் வகுத்த தமிழ்மரபு. 'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல் லாகும்மே.' என்பது நூற்பா. வடவெழுத்துக்களிற் பல தமிழியலுக்கு முரண்படுதலின், அவற்றை நீக்கி எழுதுவதே முறையென மூதறிஞர் கண்டனர். வடசொற்கள் பெரிதும் வழங்கத் தலைப்பட்ட பிற்காலத்திலும், இவ் வியலுக்கு மாறு படா வண்ணம் நன்னூலார் விதி வகுத்தார். சங்ககால முதல் இதுகாறும் தோன்றிவரும் சிறந்த நூல்கள் யாவும், இம் மொழி மரபு வழுவாமல் பாதுகாத்து வருகின்றன. ஒரு சிலர், தமிழ் எழுத்திலக்கணத்தில் குறைபாடுகள் மலிந்துள்ளன வென்றும், அவற்றை அகற்ற வேண்டுமென்றும், கூறுகின்

றனர். 'குரோமர்' என்ற ஆங்கிலப் புலவர் தம் மொழியின் எழுத்திலக்கணத்திற் காணப்பெறும் சில குறைகளைத் தொகுத்து ஒரு கவியில் விளக்கியுள்ளார். எனினும், ஆங்கில மொழியின் வளர்ச்சி சிறிதுங் குன்றவில்லை. அச்சுக்கோப்போரின் துன்பத்திற்காகச் சிலர், தமிழ் எழுத்துக்களிற் சில வற்றை அகற்ற விரும்புகின்றனர். வேறு சிலர் 'f' என்ற ஆங்கில எழுத்தையும் தமிழிற் சேர்க்கக் கருதுகின்றனர். இவை எம்மொழியாளரும் கைக்கொள்ளாதவை. வீரமா முனிவர் போப்பையர் போன்ற அயல்நாட்டார் கூட இவ்வாறு சொல்லத் துணியவில்லை. வடகலை தென்கலை உணர்ந்த நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோர், வடநூலார் கொள்கையில் அடிப்பட்டிருந்தும், தமிழமரபு இழுக்கா வண்ணம் உரை நூல்கள் இயற்றினார்களே! ஆங்கிலம், வட மொழி ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்ய நிரம்ப இடமிருந்தும் அவற்றைத் திருத்தத் துணியாதபோது, தமிழ்மொழியைத் திருத்தலாமென்பது பேதைமையாகும். கலைநூல்களில் வழங்கும் குறியீட்டுச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் நூலிலோ வழக்கிலோ கிடைத்தால், அவற்றைப் பயன்படுத்த வேண்டும்; இல்லாதபோது தமிழில் படைத்துக்கொள்ள வேண்டும்...........செருமானியர் அறிவுநூற் பொருள்களைக் குறிப்பதற்கான சொற்களைத் தம் தாய்மொழியிலேயே ஆக்கிக் கொண்டனர். இம் முறையைத் தமிழரும் பின்பற்றலாம்.''

பெரும் புலவரும் பெருந் தமிழ்க்காவலரும் இங்ஙனம் எழுத்து மாற்றத்தை எதிர்ப்பது கவனிக்கத்தக்கது.

பெரியார் ஒரு பெரியார். அவர் தொண்டு எழுத்துமாற்ற மன்று. செயற்கரிய செய்வதே பெரியார் இயல்பு. பிராமணியத்தைப் போக்குவதும் பகுத்தறிவைப் புகட்டுவதும் மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதும் தமிழரைத் தன்மானத்தொடு வாழச்செய் வதுமே, பெரியாரின் உண்மைத் தொண்டு. 'விடுதலை', 'குடியரசு' முதலிய கிழமையன்களின் எழுத்துமாற்றம் சிக்கனம் பற்றியதே. இன்று பெரியாரின் படைத்தலைவர்போல் தம்மைக் காட்டிக் கொள் பவர் இளையரும் முளையருமாயிருந்த காலத்தே, நான் பெரியாரொடு நெருங்கிய தொடர்பு கொண்டவன். என்றைக்கு இந்தி கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட்டதோ, அன்றைக்கே எனக்குப் பெரியார் தொடர்பு தொடங்கிற்று. நான் தமிழ்நலம் பற்றி ஏதேனுஞ் சொன்னால், "அதெல்லாம் நீங்களே தமிழ்ப் பண்டிதர்களாகச் சேர்ந்துகொண்டு கிளர்ச்சி செய்யுங்கள். நான் உங்களைப்போலப் பண்டிதனல்லேன். படியாத (பாமர) மக்களிடம் சென்று அவர்க

ளுடைய அறியாமையை எடுத்துக்காட்டி [என்னுலியன்றவரை சமுதாயத்தொண்டு செய்பவன்.'' என்பார். ஒருமுறை என் ஒப்பியன் மொழிநூல் பற்றி ஈரோட்டிலிருந்து 5 பக்கம் தம் கைப்பட எழுதியிருந்தார். அப் பொத்தகமும் 100 படிகள் என்னிடம் விலக்கு வாங்கினர். சிலமுறை அவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியு மிருக்கிறேன்.

ஒருமுறை, நான் காட்டுப்பாடியிலிருந்தபோது, எனக்கு வருவாயில்லையென்று தெரிந்து, என் வீடு தேடிக் கொஞ்சம் பணங் கொடுக்க வந்து, நான் ஊரில் இல்லாததால் அக்கம்பக்கத்திலுள்ளவரிடம் செய்தியைச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

பின்பு, நான் திருச்சி சென்றிருந்தபோது நண்பருடன் சேர்ந்து பெரியாரைக் காணச் சென்றேன். அவர் என்னைத் தனியாய்த் தம் மாளிகைக்கு உள்ளே அழைத்து, இருநூறு உருபா நன்கொடையாகத் தந்தார். அது ஒரு சிறு தொகையே யாயினும் பிறரிடத்திற் பெறும் ஈராயிரத்திற்குச் சமம் என்பது, அவர் சிக்கனத்தை யறிந்த அனைவரும் உணர்வர்.

நான் பெரியாரை மதிப்பதெல்லாம், எவருக்கும் அஞ்சாமையும் எதையும் பொதுமக்கட்கு எடுத்து விளக்கும் ஆற்றலும் பற்றியே. கோடிக்கணக்கான மக்களொடு கூடிக்கொண்டு கும்பலில் கோவிந்தாப் போடுவதுபோல், பேராயத்தார் ஆங்கில ராட்சியை எதிர்த்தது அத்துணை ஆண்மையன்று. கும்பகோணமாயினும் குமரிக்கோட்டக் காசியாயினும், சற்றும் அஞ்சாது பிராமணியத்தைச் சாடுவதிலும் அதன் கொடுமைகளைக் கல்லா மாந்தர்க்கு விளக்கிக் கூறுவதிலும், ஓய்வுசாய்வின்றி இனநலத்தைப் பேணுவதிலும், அவருக்கு ஈடானவர் இதுவரை இருந்ததுமில்லை ; இனியிருக்கப் போவதுமில்லை. பிரித்தானியத்தை யெதிர்த்ததிலும் பிராமணியத்தை யெதிர்த்ததே பேராண்மை.

கலப்பு மணம், பகுத்தறிவுச் செயல், தன்மான வாழ்வு முதலிய உயிர்நாடிக் கொள்கைகளை விட்டுவிட்டு, எழுத்து மாற்றம் ஒன்றையே மேற்கொள்வது, பண்டத்தை விட்டுவிட்டுப் படிவத்தைப் பற்றுவதே யாகும். தனித் தமிழை வெறுப்பவரும் உண்மையான வரலாற்றை ஒப்புக்கொள்ளாதவரும் இந்தியைப் பொது மொழியாக ஏற்பவருமான வையாபுரிகளுடன் கூடிக்கொள்வதும், தமிழுக்கு மாறான ஆரிய அமைப்பகங்களுடன் ஒத்துழைப்பதும், மூலமும் படியும் என்பதை அசலும் நகலும் என்றெழுதுவதும், பகுத்தறிவுக் கொள்கையின் அல்லது தன்மான வாழ்வின்பாற் பட்டனவாகா.

பெரியாரின் நடத்தையைப் பின்பற்றுது, பெரியார் விழாக் கொண்டாட்டத்தில் ஊர்தொறும் ஊர்வலத்திற் கலந்துகொள் வதும், விடிய விடியச் சொற்பொழிவாற்றுவதும், பெரியார் படிமைக்கு மாலையணிவதும், பெயர் விளம்பரத்திற்கே யன்றி வேறெதற்குப் பயனும்?

இதுகாறும் தமிழ்நாட்டில், தமிழர்க்கு மூவேறு வகையில் வழி காட்ட மூவேறு பெரியார் தோன்றியுள்ளனர். அவருள் ஒருவர் ஈ. வே. இராமசாமிப் பெரியார். எழுத்து மாற்றத்தையே அவர் தொண்டாகக் காட்டுபவர், அவர் பெருமைக்கு இழுக்கே தேடுபவ ராவர்; தம் சிறு கொள்கைக்குப் பெரு வெற்றி பெறவே, பெரியார் விழாவைப் பெரு வாய்ப்பாகக் கொண்டுள்ளனர்.

அறநூற் பெரியாரும் தனித்தமிழ்ப் பெரியாரும் தன்மானப் பெரியாரும் ஆகிய

முப்பெரியார் அகவல்

தமிழகத் திரே தமிழகத் திரே
மொழிவர லாறு மொழிவது கேண்மின்
பிராமணி யம்மெனும் பெருங்கொடு நஞ்சு
நாவலம் முழுதும் நலங்கெடப் பரவிப்
பைந்தமிழ் திரவிடப் பழங்குடி மக்கள்
நைந்தமை தடுக்க நன்மருந் துவராய்
வள்ளுவர் மறைமலை வன்மறப் பெரியார்
தெள்ளிய மூவர் தென்னகந் தோன்றினர்
நாற்பொருள் விளக்கும் நடுநிலை யறநூல்
நானிலப் பொதுவாய் நல்கினர் தேவர்
அயற்சொல் களைந்த அருந்தமிழ் நூல்களால்
மயற்கை யறுத்தார் மறைமலை யடிகள்
அடிமையு மதமும் அனைந்தமை கண்டே
விடுதலை பெறவழி வேறிலை யென்றே
கடவுள் இலையெனுங் காரங் கலந்து
மடந்தவிர்த் தனர்தன் மானப் பெரியார்
மூவர் குறிக்கோள் முடிபும் ஒன்றே
அடிமை யொழித்த லல்லதை எழுத்தின்
வடிவை யொழித்தல் பெரியார்க் கில்லை
குறுகிய நோக்கிற் கொள்கை பிறழ்ந்து
பண்டம் விட்டுப் படிவம் பற்றித்
தமிழர் ஒற்றுமை தடுத்துப் பகைவரைத்

தம்மோடு சேர்த்துத் தமிழுணர் விழந்து
பெரியார் பெயரைக் கெடுப்பார்
தெரியார் தம்மால் தீதுறல் அவர்க்கே.

முந்தின கட்டுரையில் விட்டுப்போன பகுதி

மகரக் குறுக்கம் பற்றிய தொல்காப்பிய நூற்பாவும் அதற்கு இளம்பூரணர் உரைத்த வழுவுரையும் வருமாறு :

"உட்பெறு புள்ளி உருவா கும்மே." (தொல். எழுத். 14)

"இது, பகரத்தின் மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

"(இ - ள்.) உள்பெறு புள்ளி உருவு ஆகும் - புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளி மகரத்திற்கு வடிவாம். (அஃதின்மை பகரத்திற்கு வடிவாம்.)

"எ - டு : ப், (ப்) எனக் கண்டுகொள்க. கப்பி, கப்பி (கம்மி) எனவரும்."

இவ் வுரையைக் கண்டே நச்சினார்க்கினியரும் மயங்கினார் போலும்! இன்றுள்ளபடியே மகர வடிவம் முன்பும் இருந்தது. மகரங் குறுகும் போதே உட்புள்ளி பெறும். எ - டு : ம்

மகரக் குறை வட்டத்திற்குள்ளேயும் ஒரு புள்ளியிருத்தல் காண்க.

மொழி திருந்தினால் வாழ்வும் திருந்தும்

நாகரிகமுடைய மக்கள் தமது மொழியை நன்கு பாதுகாத்து வளர்த்தலிற் கண்ணுங்கருத்துமாய் இருக்கவேண்டுமென்பது சொல்லாமலே நன்கு விளங்கும். மக்களின் முயற்சியால் ஒரு மொழியானது உரம்பெற்று உயிர்ப்புடையதாய் வழங்குதல் போலவே திருந்திய மொழி வழக்கினாலும் அம் மக்கள் உரம் பெற்று உயிர்ப்புடன் நடைபெறுவர்.

—மறைமலையடிகள்

(மறைமலையடிகளார் அறிவுரைக்கோவை, பக் : 61)

வள்ளலார் வகுத்த சுத்த சன்மார்க்கம்

[டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

(முன் இதழ் ந௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊனவடிவம் ஞானவடிவம் ஆதல் :

வள்ளலார் தம் சுத்த சன்மார்க்கத் திருநெறிப் பயனாக, ஊன வடிவமாகிய உடம்பு, ஞான வடிவமாக மாறுவதைப் பல இடங்களில் குறித்துள்ளனர் என்பது முன்னர்க் குறிக்கப்பட்டது. அசுத்த தேகமாகிய மனித தேகம், சுத்ததேகம், பிரணவ தேகம், ஞானதேகம் என்று மாறுதல் வேண்டும் என்பர். அன்புருவம், அருளுருவம், இன்புருவம் என்று இவற்றை முறையே மொழியலாம். இம் மூன்று தேகங்களையும் ஆளுடைய அடிகளாகிய மணிவாசகர் பெற்றனர் என்று வள்ளலார் கூறுவர்.

> ''மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
> என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
> அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
> இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூரிறையே''

என்பது அடிகளார் திருவாக்கு.[73]

''சுத்ததேகம் பெற்றவரெல்லாம் இறவாமை உற்றார் என்று கூறுவதற்கில்லை. சுவர்ணதேகம் பெற்ற பிரமன் முதலிய பஞ்ச கருத்தர்களில் காலத்தால் தடைபடுபவர்களுமுண்டு என்று அடிகள் விளக்கியுள்ளார்கள். ஆகவே சுத்ததேகமாகிய அன்புருவ நிலை யினின்றும் மேல்நிலை பெறவேண்டும் என்பதாயிற்று. அருளுருவம் அன்புருவமாகிய பெறலரும்பேறு பெற்று ஆன்ம இன்பத்தை நுகர்தல் வேண்டும்'' என்ற குறிப்பையே வள்ளலார் கொண் டிருந்தனர்.[74]

அடிகளார் தாம் பொன்னுருவம் பெற்ற செய்தியைப் பல்வேறிடங்களில் கூறுவர் :

---

73. 4. ஆளுடைய அடிகள் அருள்மாலை-3

74. இராமலிங்க அடிகள் வரலாறு-ஊரன் அடிகள் 1971-பக். 226. சுத்த சன்மார்க்க விளக்கம்—டாக்டர் கு. சீனிவாசன் 1966-பக். 75.

"பொன்னுடம் பெனக்குப் பொருந்திடும் பொருட்டா
என்னுளம் கலந்த என்தனி யன்பே"[75]

"தன்னையே எனக்குத் தந்து அருள் ஒளியால்
என்னை வேதித்த என்தனி யன்பே"[76]

"பொன்வடிவம், தாங்கினேன்
சத்தியமாத் தான்"[77]

"கூகாவென் றெனைக் கூடி எடுக்காதே யென்றும்
குலையாத வடிவெனக்கே கொடுத்ததனி யமுதே"[78]

"திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும்
செழும்பொன் னுடம்பாய்த் திகழ்ந்தேனே"[79]

இப் பேறு இறைவனிடம் தாம் அன்பு கனிந்து வேண்டியதனு லேயே கிடைத்தது; அந் நெறி நிற்பீர் என்று அனைவர்க்கும் அறிவுறுத்தும் பாடல்களும் பலவாகும்.

"நினைந்து நினைந்து உணர்ந்து ணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்தன்பே
நிறைந்து நிறைந் தூற்றெழுங்கண்
ணீரதனல் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே
நன்னிதியே ஞான நடத்தரசே
என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதுநாம்
வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர்."[80]

அருள் ஒளிப்பேறு :

அருள் ஒளி அனுபவம் விளைந்திட அடிகளார் உரைக்கும் உபதேசம் இதுவாகும்: "நமது புருவமத்தியில் வெண்டாமரை மலர் மலர்ந்திருப்பதாக, அதன் மத்தியில் ஓங்கார வடிவமாய் ஒரு பீடம் இருப்பதாக, அதன் மத்தியில் அசையாது விளங்குகின்ற ஒரு கற்பூர தீபம் இருப்பதாக, அந்தத் தீப நடுவில் கடவுள் இருப்பதாகப் பாவித்துக்கொண்டு 'சிவாயநம' என்று நாவசையாமல்

75. 6-1-1489 76. 6-1-1480
77. 6-99-15 78. 6-38-56
79. 6-93-6 80. 6-110-1

நினைக்க வேண்டும். சுத்த சன்மார்க்க சித்திகள் எல்லாம் கிடைக்கும் இதை நம்பவேண்டும்.'' இவ் வுபதேசப் பகுதி சுத்த சன்மார்க்க நெறியாளர் பின்பற்றத்தக்க பெற்றி உடையதாகும்.[81]

''ஈசனருளால் கடலில் ஏற்றதொரு வோடம்
ஏறிக்கரை யேறினேன் இருந்ததொரு மாடம்
தேசுறுமம் மாடநடுத் தெய்வமணிப்பீடம்
தீபவொளி கண்டவுடன் சோர்ந்தது சந்தோடம்''

என்று அடிகளார் கூறுவது இந்த அனுபவத்தையே ஆகும்.[82] நெற்றிக்கு நேரே புருவ நடுவில் காணப் பெறும் ஒளி அனுபவம் சன்மார்க்க நெறியாளன் பெறத்தக்க பெரும்பேருகக் கருதினர்.

''பற்றி னுள்ளே பரமாய் பரஞ்சுடர்
முற்றினு முற்றி முனைக்கின்ற மூன்ளுெளி
நெற்றியி னுள்ளே நினைவாய் நிலைதரும்
மற்றவனாய் நின்ற மாதவன் தானே''[83]

''விளக்கினை யேற்றி வெளியை யறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளக்கும் விளக்கவர் தாமே''[84]

என்று திருமூலர் கூறும் அனுபவமே அடிகளார் திருவாக்கில் இவ்வாறு வந்துளது எனலாம்.

இத்தகு அனுபவம் உடைய பெருஞானியர் உடம்பில் இறைவன் அருள் பரவும்; கண்களில் அருட்கதிர் வீசும்; உடம்பும் உயிரும் ஒளிமயமாகும்; உடல் பொன்னுரு எனப்படும் அன்புருவம் ஆகும். இவ்வாறு உடலில் தோன்றும் மாற்றத்தை அடிகளார் அழகுற விளக்கும் பகுதியும் திருவருட்பாவில் திகழ்கின்றது.

தோலெல்லாம் குழையும்; நரம்புகள் அனைத்தும் கட்டு விட்டு இயங்கும்; இருவகை எலும்புகள் உருகி நெகிழும்; தசைகள் தளரும்; உடலிலுள்ள இரத்தம் அனைத்தும் உள்ளே இறுகி விடும்; சுக்கிலம் பந்தித்து ஒரு திரளாகிவிடும். மூவகை மூளைகளும் மலர்ந்திடும்; உடல் முழுதும் அமுதம் ஊற்றெடுத்து ஓடும். நெற்றியில் வியர்வை; முகத்தில் ஒளி; மூச்சுக் காற்றில் தண்மை; சாந்தம் ததும்பும், நகை உள்ளே தோன்றும்; உரோமம் பொடிக்கும்;

81. 6-168-4
82. ,,
83. திருமந்திரம் 3031
84. திருமந்திரம் 1818

கண்ணீர் பெருகிக் கால்வழிந்தோடும். வாய்துடித்து அலறும்; இரு செவித்துளைகளிலும் 'கும்' என்ற ஓசை கேட்கும். மெய் முழுதும் குளிர்ச்சி எய்தும்; இதயம் துடித்து அசையும். இரு கைகளும் குவியும்; காலிரண்டும் சுலவிடும்; மனம் கனிந்து உருகும், அறிவு நிறைந்து ஒளிரும்; சித்தம் மன அறிவுகளுடன் ஒன்ருகிக் களிக்கும்; அகங்காரத்தின் அதிகரிப்பு அடங்கும். சகத்தைக் காண உள்ளம் தழைத்து மலரும்; உடல் அறிவு மயமாகி ஆனந்தம் எய்தும்; ஆன்ம போதம் அகலும்; தத்துவம் அனைத்தும் ஒழிந்திடும்; சத்துவம் மட்டும் தனித்து நின்று ஓங்கும், உலகப் பொருள்கள் எல்லாம் மறையும், அலகிலா அருளின்மீது ஆசை பொங்கி எழும்; நெஞ்சில் எழும் அன்பு உயிரெல்லாம் மலரத் திருவருளாக ஓங்கும்; இவ்வாறு ஆண்டவன் அடிகளாரின் பேரன்பினுல் அவரது உடலில் கலந்தான், உளத்தில் கலந்தான். உயிரில் கலந்தான், அருள் ஒளியால் அவரை வேதித்து அவரது பூதச் சேர்க்கையாலாகிய உடலைப் பொன்னுருவாகிய அன்புருவமாக மாற்றினுன். இருபத் தெட்டு வரிகளில் இம் மாற்றத்தை அடிகளார் அப்படியே விரித் துரைத்துள்ளார்.[85]

> "விரைந்து விரைந்து படிகடந்தேன்
> மேற்பால முதம் வியந்துண்டேன்;
> கரைந்து கரைந்து மனமுருகக்
> கண்ணீர் பெருகக் கருத்தலர்ந்தே
> வரைந்து ஞான மணம்பொங்க
> மணிமன் றரசைக் கண்டுகொண்டேன்
> திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும்
> செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே"[86]

> "தன்னையே எனக்குத் தந்தரு ளொளியால்
> என்னை வேதித்த என்தனி யன்பே"[87]

> "பொன்னுடம் பெனக்குப் பொருந்திடும் பொருட்டா
> என்னுளம் கலந்த என்தனி யன்பே"[88]

என்பன இந் நோக்கிற் காணத்தக்கவை. அருளுருவ நிலையில் உயிரினேடு கலந்து ஒன்ருகி ஆண்டவன் இன்பம் தருவான் என்ப தற்கும், ஞானதேகத்தில் இறைவனேடு ஒன்றி நின்று சிவமாகி என்றும் இன்பம் தழைக்க இருக்கும் நிலை வாய்க்கும் என்பதற்கும் அடிகளார் திருவாக்கில் இவ்வாறே எண்ணற்ற சான்றுகள் உள்ளன. சுத்த சன்மார்க்க நெறி பற்றுவோர்க்கு இப் பேறுகள் வாய்ப்பது சத்தியம் என்பது வள்ளலார் திருவுள்ளம் ஆகும்.

---

85. 6-1-1449-1476
86. 6-93-6
87. 6-1-1480
88. 6-1-1489

சன்மார்க்கியின் ஆடை :

சுத்த சன்மார்க்க நெறியாளர் வெள்ளை ஆடைகளை உடுத்தலையே அடிகளார் விரும்பினர். மூவாசைகளிலும் பற்று மிக்கவர்கள் கடுஞ்சித்தம் உடையோர், அவர்கட்கே கல்லாடைத் துறவு வேண்டும். வெள்ளாடை வெற்றிக் கொடி போன்றது, தத்துவத்தை வென்றோர்க்கு வெள்ளாடையே தக்கது என்பது வள்ளலார் திருவுள்ளம். "மூன்றாசைகளில் விசேடப் பற்றுள்ளவர்களாகித் தயவில்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேல்படி குற்றமற்றவர்களுக்குச் சந்நியாசம் வேண்டுவதில்லை. சந்நியாசி காவி வேட்டி போடுவதற்கு ஞாயம். தயவில்லாத கடின சித்தர்களாகையால் தத்துவாபாச முள்ளது. தத்துவத்தைக் கெலித்துத் தயவை நடத்துவதற்கு யுத்தக்குறி (அல்லது) அடையாளமாகத் தரிப்பது காவி. வெற்றியான பிறகு தயவு, ஆதலால் வெற்றிக் கொடி வெள்ளை."[89]

சன்மார்க்கக் கொடி :

சன்மார்க்க நெறி பரப்பும் சங்கம் கண்ட அடிகளார், இதற்கென ஒரு கொடியும் அமைத்தனர். அதன் தத்துவத்தை அடிகளார் தம் திருவாக்கில் பின்வருமாறு விளக்கியுள்ளனர்; "இதற்குச் சாட்சியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக் கொண்டது. அக் கொடி உண்மையில் யாதெனில், நமது நாபி முதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடியிருக்கின்றது. அந்த நாடி நுனியில் புருவ மத்தியின் உட்புறத்தில் ஒரு சவ்வு தொங்குகின்றது. அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம், மேற்புறம் மஞ்சள் வர்ணம், அச் சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது. இக் கொடி நம் அனுபவத்தின்கண் விளங்கும். இவ்வடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லார்க்கும் நல்ல அநுபவம் அறிவின்கண் தோன்றும்."[90]

கண்ணாற் கண்டறியக் கூடிய கொடி அன்று சன்மார்க்கக் கொடி. அகமுக அனுபவத்தாற் கண்டறியக் கூடியது. "முன்னைய ஞானிகள் எவரும் தம் கொள்கைக்குத் தனிக்கொடி கண்டதில்லை. அடிகள் ஒருவரே தமது மார்க்கத்திற்குத் தனிக் கொடி கண்டனர்.

"கொடிகட்டிக் கொண்டோ மென்று சின்னம்பிடி
கூத்தாடு கின்றோ மென்று சின்னம்பிடி"

என்று பாடினர்.[91]

---

89. உபதேசப்பகுதி பக். 22
90. திருவருட்பா திருநெறிக் குறிப்புக்கள் பக். 733
91. 6-ஆனந்த மேலீடு-2-4.

ஆராய்ச்சி வகைகளும் (Varieties) நிலைகளும் (Standards)

[டாக்டர் ந. சஞ்சீவி,

பேராசிரியை கிருட்டிண சஞ்சீவி]

மனமே மனிதன் மனிதனே மன்பதை.

மனம் பலவகை; அதனால் மனிதனும் பலவகை. மனிதன் பலவகை; அதனால் மன்பதையும் பலவகை. வேறு சொற்களில் சொன்னால் உள்ளம் பலவகை அதனால் உலகமும் பலவகை.

வகைகள் எத்தனையாயினும் அவற்றிற்கு மேலெல்லை ஒன்று உண்டு. அதுதான் மேன்மை அல்லது உயர்வு. கீழ் எல்லை ஒன்று உண்டு. அதுதான் கீழ்மை அல்லது ஊழல்.

மனித மனத்தின் பண்பு: ஆய்வு—வகை காணல்; மனித மனத்தின் பயன்: ஆய்வு—தகை (தகுதி) பெறல். அறிவின் அடிப்படை இயல்பு—பண்பு: ஆய்வு; முடிநிலை இயல்பு—பயன், அமைதி. ஆய்வு அலைவு; துன்பம். அமைதி அலையாமை; இன்பம். ஆய்வின் பயனாகிய அமைதியை ஆக்க இன்பம் என்றும் அழைக்கலாம். அமைதி - உயர்ந்த அமைதி; உயிரற்ற அமைதியன்று; உயிருக்கம் நிறைந்த அமைதி. அந்த அமைதி தாயுமானவர் உவமையில் வைத்துச் சொன்னால் சுழற்சி வேகத்தின் உச்சத்தைச் சுட்டும் சுழல் பம்பரத்தின் அமைதி. நம் காலத்து உவமையை நாடினால் சுழலும் மின் விசிறி சுழற்சியைக் காட்டும் உச்சத்தின் அமைதி.

மேற்கண்ட விளக்கத்தால் ஆய்வின் இரு எல்லைகளை—இரு கண்களை—பண்பையும் பயனையும் தெளிவுறத் தெரியலாம். இக் கட்டுரையில் பண்பின் பெருஞ் சிறப்பாய் விளங்கும் வகைகளையும் பயனின் பெருஞ்சிறப்பாய் விளங்கும் தகைநிலைகளையும் கருதிக் காணலாம். 'இலக்கிய இயல் அ - ஆ' என்ற புத்தகம் ஆராய்ச்சிக்கு உரிய அடிப்படை ஐந்துகளை 1. அரசியல் 2. பொருளியல் 3. சமூகவியல் 4 அறிவியல் 5 கலையியல் என்ற முறைப்படுத்தி விளக்குகிறது. (இலக்கிய இயல் அ- ஆ - சஞ்சீவி பக்கங்கள்) மேற்கண்ட ஐவகைப் பாகுபாடுகளில் அடங்காத நூல் எதுவும் இல்லை என நுவலலாம். இது பற்றிய விளக்கத்தை மேற்கண்ட நூலில் வரிவாகக் காணலாம். ஆயினும்

மேற்கண்ட ஐவகைப் பாகுபாடுகளில் கரந்து கலந்து இருப்பினும் தனிவகையாகப் பிரித்துச் சிறப்பாக ஆராயக் கூடிய வேறு மூன்றுகளை வேண்டுமானால் ஈண்டு விதந்து விளம்பலாம். அவை காலம், களம், காரணம் என்னும் மூன்றாகும். இவை நன்னூல் பாயிரத்தாலேயே நன்கு விளங்கும். ஏன்? தொல்காப்பியப் பனம்பாரனார் பாயிரத்தாலேயே பளிச்சிடும்.

காலம், களம், காரணம் ஆகிய மூன்றும் முதலிரண்டும் தொல்காப்பியப் பொருளதிகாரம் துலக்கும் முதற் பொருளே யாகும். ஒருவகையில் முதற் பொருளின் விளைவுகளாகவே விளங்கும் கருவையும் உரியையும் போல் காரணத்தையும் கருதலாம். முதற் பொருளுக்கும் உரிய முதற் காரணத்தை இன்றும் அறிய இயலவில்லை என்று ஆத்திரம் கொள்கிறது அறிவியல்; என்றும் அறிய இயலாது என்று அமைதி அடைகிறது ஆன்மீகம். இந் நிலையில் முடிந்த மட்டும் காரணங்களைக் காணும் முயற்சியே ஆய்வியலின் மூச்சு. அம் மூச்சு உயிர்ப்பு இல்லா ஆய்வு எதுவாயினும்—எவருடையது ஆயினும் அது பலனற்றதாகும்

மேற்படி உயிர்ப்பை இருவகைகளில் பெறலாம் 1. சுய அறிவால் மற்றொன்று சொல்லறிவால். இப் பாகுபாடும் புதுவது அன்று. 'ஒன்று சொந்த புத்தி வேண்டும். இல்லாவிட்டால் சொற்புத்தியாவது கேட்க வேண்டும்' என்பது பழமொழி.

ஆய்வியலைக் காலம், கருத்து, களம், கலை, காரணம் என்ற புதிய ஐந்து அடிப்படைகளில் பாகுபடுத்தியும் நடத்தலாம்.

ஆய்வியலில் இரு இரட்டைகள் உண்டு. ஒன்று அகலம்; மற்றொன்று ஆழம் ஒன்று வகை தொகை. மற்றொன்று விளக்கம். அகலத்திலும் ஆழமே சிறந்தது. வகை தொகையினும் விளக்கமே சிறந்தது. ஆனால், அகலமில்லாத ஆழமுமில்லை. வகைதொகையில்லாத விளக்கமுமில்லை. ஊசி முனை அகலத்தில் ஒரு கடல் ஆழத்தையும் காணலாம். ஒரு கடல் ஆழத்தில் ஊசி முனை அகலத்தையும் காணலாம். எவ் வகையிலும் ஆழத்தின் சிறப்பே சிறப்பு—விளக்கத்தின் விழுப்பமே விழுப்பம்.

ஆராய்ச்சிக்கு உரிய பொது அடிப்படைகள் இரண்டு. ஒன்று இடைநிலை (horizontal). மற்றொன்று செங்குத்து நிலை (vertical). மொழியியல் துறையில் கிடைநிலை ஆய்வை Diachronic என்றும், செங்குத்துநிலை ஆய்வை synchronic என்றும் கூறுவர். இலக்கிய ஆய்வியலிலும் ஒரு குறிப்பிட்ட

காலத்துப் பொருள் பற்றிய ஆழ்வு ஆய்வையும் பல காலத்தும் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய அகல ஆய்வையும் மேற் கண்ட வாய்பாட்டில் பொருத்திக் கொள்ளலாம். ஆழ்வு, அகலம் என்னும்போது யாதாயினும் ஒன்று தலைமை என்பதே பொருள்.

இக் காலத்தில் ஒப்பாய்வு பெருமை பெற்று வருகிறது. இதுவும் பண்டைப் படைப்பு நூல்களுள்ளும் உரை நூல்க ளுள்ளும் கண்ட ஒன்றே. எந்த இரு பொருள்களையும் ஒப்பாய்வு செய்தல் ஒல்லும். காரணம் எல்லாம் இயற்கையின் பகுதிகளே. ஆனால் அதில் சிறப்பு சிறுமை வேறுபாடுகள் உண்டு. தெள்ளத் தெளிவாகத் தெரியும் ஒப்புடைய இரு பொருள்களை ஒப்பாய்வு செய்தல் யார்க்கும் எளிதாம். மறைந்து நிற்கும் ஒப்புடைய இரு பொருள்களில் ஒப்புப் பண்புகள் இருப்பதை உணர்தலே அறிவிற் சிறந்த அறிவு. பிற துறைகளைப் போலவே இத் துறை யிலும் அளவு அன்று சிறப்பு; தரமே சிறப்பு. இரு பொருள் களுக்கிடையே ஒரு நூறு வேறுபாடுகள் இருக்கலாம்; ஆனால், ஒப்பு ஒன்றே ஒன்று இருக்கலாம். அந் நிலையில் எண்ணிக்கை யன்று ஏற்றம் தருவது; ஒன்றாயினும் அதன் உயர்வே உயர்வு.

ஒப்பாய்வு என்ற நாணயத்தின் மறுபுறம் முரணாய்வு ஆங்கிலத்தில் இவ் விரண்டையும் Comparative and contrastive என்று சொல்வார்கள். ஒப்புடைய பொருள்களாகத் தோன்று வனவற்றிலேயே முரண்பாடுகளைக் காண்பதும் முரண்பாடுடைய பொருள்களாகத் தோன்றுவனவற்றிலேயே ஒப்புக் காண்பதும் உயர்வு. ஈண்டு ஒப்பு, முரண் என்பதெல்லாம் சார்பு நிலையில் (Relative) மட்டுமே என்பதும் முழு நிலையில் (Absolute) இப் பொருள்கள் பொருளற்றனவாய்ப் போகுமென்பதும் உணர்தற் குரியது.

ஒப்பாய்வு பற்றி எண்ணும்போது தக்கதோர் எடுத்துக் காட்டு விளக்கம் வழங்க எங்கள் அறிவு முந்துகிறது. இந்த உலகில் கோடானுகோடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் பேசும் மொழிகள் பல்லாயிரக்கணக்கில் உள்ளன. இந்த மொழிக ளிடையே ஒப்பாய்வு செய்யலாம் அல்லவா? ஏன், மனிதரல்லாத மற்ற உயிர்கள் பேசும் பேச்சுகளோடும் மனிதப் பேச்சை ஒப் பாய்வு செய்யலாம். காரணம் கருத்துக்களின் வெளிப்பாடே ஒலிகள், மொழிகள். இன்னும் சொன்னால் சாடைமொழிகளையும் சார்த்தி - சேர்த்துப் பார்க்கலாம். ஆனால், மனித மொழிக ளிடையே மட்டும் ஒப்பு - முரணாய்வுகளைக் காண்பதையே மொழியியல் உலகம் பெரிதும் மேற்கொண்டுள்ளது. காரணம்

எளிது இனிது. எனவே ஒப்பு முரணாய்வில் முதன்மை இடம் எல்லாத் துறைகளிலும் போலவே இத் துறையிலும் எளிமைக்கே கிடைக்கிறது. ஆனால், அறிவாராய்ச்சித் துறையில் எளிமையினும் அருமைக்கே ஏற்றம் என்பது கடல் மேல் கப்பல். ஆயினும் பலர் போற்றும் எளிமையினும் சிலர் போற்றும் அருமையே இறுதி மதிப்பு பெறும் என்பது உறுதி.

இனி மேற்கண்ட எடுத்துக்காட்டைப் பற்றி மேலும் சிறிது சிந்திப்போம். உலக மொழிகளிடை ஒப்பு - முரணாய்வுகள் தோன்றும்போது முதற்கண் அல்லது கால அடைவில் தோன்றும் தெளிவு மொழியியல் பொதுமைகள் (Linguistic universals) பற்றியது ஆகும். அடுத்த நிலையில் ஆய்வுக்குத் தோய்வுப் பொருளாவது மொழியியல் புதுமைகள் (Linguistic specialitiser peculiarities) ஆகும். இந்த மொழியியல் புதுமைகள் அல்லது தனிச் சிறப்புக் கூறுகள் அடிப்படையிலேயே மொழிக் குடும்பப் பாகுபாடுகள் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டு : இந்தியத் தமிழும் ஆப்பிரிக்க ஒலிப்பு (Tonal language) மொழியும் உலக மொழிகளின் ஒற்றுமை வேற்றுமைகளை மேலும் உணர, பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களின் 'உலக மொழிகள்' நூல் வரிசை காண்க. அதற்கு அடுத்த நிலையில் ஒரு மொழிக்குள்ளேயே செம்மை நிலை (Standard) கொச்சை நிலை (colloquial) பற்றிய ஆய்வுகள் முற்றுகின்றன. இது பற்றிய விரிவான ஆய்வுக்குப் பேராசிரியர் டாக்டர் மு. சண்முகம் பிள்ளையின் பிஎச்.டி. ஆய்வேடு பார்க்கத்தக்கது. இன்னும் சமூக அடிப்படையிலும் (Socio linguistics) உள இயல் அடிப்படையிலும் (Psycho Linguistics) ஆய்வுகள் ஆளப்படுகின்றன. இன்னும் இவ் வகையில் பண்பாட்டு மொழியியல் (Cultural Linguistics) மெய்ப்பொருள் மொழியியல் (Philosophical Linguistics) முதலியன மேம்படுதல் வேண்டும். மொழியியல் துறையில் வேறு வேறு அடிப்படைகளில் நடைபெறும் ஆய்வுகள் பற்றி ஈண்டு விளக்கங்கள் வேண்டுவதில்லை.

இங்குக் குறிப்பிடத் தக்கதெல்லாம் மொழிகள் என்ற ஒரு பெருந்தொகைக்குள் பல பொருள் வகைகள் ஏற்படும் பான்மையைக் குறிப்பிட்டுக் காட்டவேண்டும் என்பதே. இவ்வாறு வகுக்கப்படும் வகைகளுக்கிடையே ஒப்பு-முரணாய்வுகள் வளம் பெறுகின்றன.

மக்களுள் எந்த இருவரும் பேசும் பேச்சும் ஒரே மாதிரி ஒலிப்பு உடையன அல்ல. இன்னும் சொன்னால் ஒருவர்

ஒருமுறை பேசும் பேச்சுப் போல் இன்னொரு முறை பேசுவது இல்லை என்றும் கூட நுண்ணொலி அளவைகளால் அளந்து காட்ட இயலும். ஆயினும் பண்பு நுண்மை கருதிய போதும் அதன் பயன் திண்மை கருதியபோது மட்டுமே அத்தகைய ஆய்வு இன்றியமையாததாகும். இத்தகையதோர் ஆய்வு ஒரு காலத்தில் வெறுக்கப்படுதலும் கூடும். ஆனால் அதுவே வேறொரு காலத்தில் பெரிதும் விரும்பப்படுதலும் கூடும். சான்றாக வெளிப்படையாகப் பகைத்து வாழ்வதே அரசியல் வாழ்வு என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. இப்போதோ புறத்தே நகைத்தும் அகத்தே பகைத்தும் வாழ்வது அரசியல் என்று வள்ளுவரும் காட்டும் வழியில் வாழ்கிறார்கள். ஆனால், அடுத்த நூற்றாண்டின் இறுதிக்குள் எவ்வளவுக் கெவ்வளவு கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக்கும் நட்பு அடிப்படைகளை - ஒருமைப்பாட்டு உணர்வுகளை உறுதிப் படுத்துவதில் போட்டா போட்டிகளும் ஏற்படும். இருபத்து ஓராம் நூற்றாண்டு-முப்பதாம் நூற்றாண்டின் முன் நூற்றாண்டுப் பொதுவுடைமைப் பூங்காவில் வேறு வேறுபட்ட ஆயிரம் பூக்கள் ஒன்றுக்கொன்று உறுதுணையாகவே பூத்துக் குலுங்கும்; முரண் பாட்டிலும் அரண்பாட்டைக் காட்டும்.

இவ் வகையில் இன்னும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டைச் சொல்வதாயின் ஒரு காலத்தில்—ஏன் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் கூட அறிவியலும் (Science) அருளியலும் (Spiritualism) ஒன்றுக் கொன்று பகையாகவே பார்க்கப்பட்டது. ஆனால், இந்த நூற்றாண்டு முடிவுறும் நிலையில் அறிவியலும் அருளியலும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என ஓதப் படுகிறது. இது பற்றிப் படித்துப் பயன்பெறத் தக்க ஒரு நூல்; சுவாமி ரங்கனாதாவின் (Science and yoga) எனவே ஒரு காலத்தில் ஒப்புக்குரியதாகக் கருதப்படாத பொருள் அறிவும் பண்பும் ஆக்கம் பெற்ற இன்னொரு காலத்தில் ஒப்புக்கு உரிய ஒரு பொருளாகவும் கருதப்படும். அவ்வாறே நுனிப்புல் அறி வினர்க்கு ஒப்புடையதாக ஒரு காலத்தில் தோன்றாத பொருள் அவர்களே நுண்வல்/நுண்பல்/நுண்திண் அறிவு பெற்ற காலத்தில் ஒப்புக்குரிய உப்பென உயர்ந்த பொருளாய் அது காறும் கரந்திருந்த பொருள் காட்சியளிக்கலாம்.

இனி ஆய்வியலின் தகைகள் அல்லது தகுதிகள் அல்லது தகவுகள் (ஆம்) தகுதிகள் தகைகள் ஆகிவிடக் கூடாது பற்றிப் பார்ப்போம். ஆழம்தான்—ஆழத்தில்தான் அருமையும் பெரு மையும் என்று சொல்லியபின் தகை அல்லது தகுதி நிலைகளின்

தன்மையும் அதைப் பொறுத்தே அமையும் என்பது எளிமை—இனிமை. இதை எய்துதற்கு உரிய வழிகள் யாவை? முதல் வழி—முதலான வழி—பரந்துபட்ட ஆய்வுலகில் தனக்குப் பிடித்த துறை அல்லது பிரிவிலேனும் என்ன என்ன ஆய்வுகள் இதுவரை நடந்திருக்கின்றன. 2. எந்த எந்த ஆய்வுகளால் எந்த எந்த முடிவுகள் ஏற்பட்டிருக்கின்றன—எந்த எந்த முடிவுகள் ஏற்பட வேண்டியன. 3. எந்த எந்த ஆய்வுகளால் எதிர்காலத்தில் மன்பதை பயன் பெறும் என்பதை எண்ணிப் பார்த்து ஆய்வுப்பொருளை மேற்கொள்வதே அருமை—பெருமை எடுத்துக்காட்டாகப் பரந்து பட்ட ஆராய்ச்சி என்பது 'தமிழாய்வு'. அதில் ஆய்வாளனுக்குப் பிடித்தமான ஆரய்ச்சிப் பிரிவு அல்லது துறை என்பது ஜெயகாந்தன் நாவல்களில் புரட்சி அல்லது ''கவிஞர் காமராசன் பாடல்களில் புரட்சி'' அல்லது ''சேதுராமன் பாடல்களில் சீற்றம்'' என்பது. இவ்வாறு ஒரு தலைப்பை எடுத்துக்கொள்ளும் பொழுது செய்யத் தக்கன இரண்டு. ஒன்று புரட்சி என்றால் என்ன என்பது பற்றி ஆய்வாளன் தரும் விளக்கம் காரணம் முகத்திரை, வேண்டி பிற்போக்கும்—பிறபோக்கும் 'புரட்சி' எனப் 'புரட்டு' செய்யப்படலாம். இரண்டு அந்த விளக்கத்திற்கு ஏற்ப ஜெயகாந்தன், காமராசன், சேதுராமன் எழுத்துக்களில் காணப்படும் கூறுகள் பற்றிய எடுத்துக்காட்டுகள் இந்த இரண்டையும் மேற் கண்ட பல்வகைப் பாகுபாடுகளோடும் அடக்கி விளக்கம் காணும் பொழுது தானாகத் தகுதி தவழும்.

இலக்கியப் படைப்புக்களை ஆராயுங்கால் தொன்மைக் காலத்திலும் அண்மைக் காலச் சான்றுகள் ஏராளமாகக் கிடைக்கும். காரணம் பட்டப் பகலில் பசு. இதனால் படைப்பாளனின் காலம் பற்றியும் அவன் தனி வாழ்க்கை பற்றியும் துல்லியமாகத் தெரிந்துகொள்ள எல்லா வாய்ப்புகளும் ஏற்படுகின்றன. காலப்பொது, தனிமனிதச் சிறப்பு இரண்டன் பயனாகப் பிறப்பதே இலக்கியம். ஆம். இலக்கியக் குழந்தைக்குக் காலப்போக்கைத் தந்தை என்றும் தனிமனித (படைப்பாளனின்) நோக்கைத் தாய் என்றும் குறிப்பிடலாம். இவ் வுண்மை பேற்றுத் துன்பத்திலும் பார்க்கலாம். இப் போக்கையும் நோக்கையும் ஆழப் புரிந்துகொண்டு இலக்கியப் படைப்புக்களை ஆராயும் பொழுது காரண விளக்கம் கலங்கரைவிளக்கம்போல் கதிரொளி விளக்கம்போல் ஏற்படும்.

இதுகாறும் கூறியவற்றால் ஆராய்ச்சி என்ற நாணயம் அதன் மாசு படாத—மழுங்கலடையாத—குத்துப்படாத அதன்

இரு பக்கங்களாகிய (1) வகைதொகை (2) விளக்கம் என்பது நீளிருள் நிலாவாகும்.

பகுத்தறிவின் பயனே விளக்கம்தான். இந்த விளக்கமே ஓர் ஆக்கம்தான். அகராதித் தொகுப்பு போன்ற ஒரு முயற்சி கூட இத்தகைய தேசீய—மன்பதை ஆக்கத்திற்கே என்பது முன்னேரும் செய்த முடிவு. இவ் வுண்மையைச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி (1936) தனது ஆட்சிக்குழு முன் னுரையால் நன்கு விளக்கியுள்ளது அதன் வாசகம் வருமாறு:

Further one of the things most needed in the country was modern high class vernacular literature, since there was as yet almost nothing for past pupils to read in their vernacular after leaving school nothing in the way of interesting and informing literature either to assist their further development or even to keep up the knowledge they had acquired; and it was believed that the publication of a standard Tamil Dictionary would foster the growth of such literature. Finally it was urged that the study and development of the language and consequently of vernacular literature must be placed high amongst all work which has the revival and development of the country as its object.

மேற்கண்ட வாசகத்தால் விளக்கம் விளைக்கும் ஆக்கம் பற்றிப் போதுமான விளக்கம் பெறலாம். இந்த விளக்க ஆக்கங்களைப் பொறுத்ததே ஆராய்ச்சியின் தகுதிநிலைத் தரப் பாடுகள்.

———

மெய்யறிவும் பொய்யறிவும்

''நம் மக்களிற் பெரும்பாலார் அவர் கற்றவராயினும் கல்லாதவ ராயினுங், தங்கண்ணெதிரே காண்பனவுஞ் செய்வனவு மெல்லாம் உண்மைக்கு மாருகப் பிழைபடச் செய்து தாந் துன்புறுவதோடு பிறரை யுந் துன்புறச் செய்கின்றனர்! இவ்வாறு இவர்கள் நிகழ்கால நிகழ்ச்சி களிலேயும் மெய்யோடு திறம்பிப் பொய்படு மறிவினராயிருக்கக் காண்டலின், இவர்களது அறிவை உண்மை நிலையின தென்றுரைக்க மெய்யறிவு வாய்ந்தார் ஒருப்படுவரோ சொன்மின்கள்.''

—**மறைமலையடிகளார்**

(மறைமலையடிகளார் அறிவுரைக்கோவை, பக். 13-14)

தமிழர்தம் எண்ணியல் நுண்ணறிவு

[புலவர். பொன். முனியப்பன், கூவலூர்.]

எண்ணும் எழுத்தும் இரு கண்களுக்கு நிகர் என்பது வள்ளுவர் கருத்து. இன்றைய அறிவியலின் ஆக்கங்க ளெல்லாம் எண்ணி ஆயும் ஆற்றலையும் எண்களையும் அடிப்படை யாகக் கொண்டு உருவானவையே. எழுத்தைவிட எண்ணுக்கே அரிய பேராற்றல் உண்டு என்பதை உணர்த்தத்தான் வள்ளுவர் எண்ணை முதலில் வைத்தார் போலும்.

தொல்பழங்காலத்திலேயே எண்களுக்குத் தனிவடிவம் கண்டவர் தமிழர். சுழியம் அல்லது சுன்னம் என்னும் அடிப்படை எண் உருவை அமைத்துக்கொண்டு பத்தடுக்கு முறையில் எண்களை வகுத்தவர் தமிழரே. இவ் வுண்மையை வரலாற்ருசிரியர் களும், பிற அறிஞர்களும் உணராமல் இருப்பதும் உணர்ந்தோர் உரையாமல் இருப்பதும் பெரிதும் வருந்துதற்குரியவாகும்.

வரலாற்றறிஞர்கள் போற்றிப் புகழும் எகிப்தியர்கள் கண்ட எண்முறை அறிவு நிலையில் வளர்ச்சி பெருதார் அமைத்துக் கொள்ளும் முறைக்கு ஒப்பானதாகும். நாட்டுப்புறங்களில் பால் கணக்கு, மோர்க் கணக்குப் போடும் பெண்டிரும் பிறரும் சுவரில் கரிக் கோடுகள் வரைந்து கணக்கிடுவர். இம்முறையே எகிப்தியர் களின் எண் முறையாகும்.

ஒன்றுகளுக்கெல்லாம் ஒவ்வொரு கோடு இடுவர். பத்துக்கு 'n' என்னும் குறியீடு உண்டு. இவ்வாறே நூறு, ஆயிரம், பத் தாயிரம், இலக்கம் ஆகியவற்றிற்கும் தனித்தனிக் குறியீடுகள் உண்டு. இவற்றை ஓர் ஒழுங்குமுறையில் எழுதும் வழக்கம் இல்லை. முன்பின் மாற்றியோ கலந்தோ, எப்படி வேண்டு மானுலும் எழுதி எல்லாவற்றையும் கூட்டி அந்த எண் என்ன என்பதை அறிவர்.

உரோமர் கண்டமுறையில் I, V, X, L, C, D, M என்னும் குறியீடுகள் முறையே ஒன்று, ஐந்து, பத்து, ஐம்பது, நூறு, ஐந்நூறு, ஆயிரம் என்னும் எண்களைக் குறிக்கும். இவையும் பிறவும் தமிழர் கண்டமைத்த எண்முறைகளோடு ஒப்பிட்டு நோக்கவும் தகுதியற்றனவாகும்.

தமிழர் கண்ட எண்கள் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணக்கியல்களுக்கு ஏற்ற தகுதியுடையன.

கணக்கு என்பதே கணம்-கூட்டம் என்ற சொல்லின் அடிப்படையில் பிறந்ததே. கூட்டலை முதலில் குறித்த கணக்கு, பின்பு அதன் வழிப்பிறந்த கழித்தல், பெருக்கல்,. வகுத்தல் ஆகியவற்றிற்கும் பெயராய் அமைந்தது.

'இன்று, கணிதத்துறையிலும், கணிதத்துறை மூலமாகவும் ஆற்றப்பட்டுள்ள வியத்தகு செயல்களுக்கெல்லாம் ஐரோப்பியர் கண்ட எண்களைப் பயன்படுத்தியிருப்பின் ஒருபோதும் இயலாத செயலாகவே ஆகியிருக்கும்' எனக் கூறும் இசுலாமியக் கலைக்களஞ் சியத்தின் (பக்: 414) கூற்று எத்துணை உண்மை என்பதை எண்ணிப் பாருங்கள்!

வாணிகம் செய்யத் தென்னகத்திற்கு வந்த அரேபியர்கள் தமிழர்களிடமிருந்து கற்ற எண்களே ஐரோப்பியர் வழி இன்று உலகமுழுவதும் பரவியுள்ளது. ''கிச்ரி ஆண்டு 154இல் பாக்தா துக்கு வந்த இந்தியப் பயணி ஒருவரால்தான் (தமிழர் கண்ட) இப் போதைய எண்கள் அரபுநாட்டில் அறிமுகமாயின,'' என்றும்; ''கி.பி. 9ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் 'குவாரிசுமி' என்பவர் தாம் இந்த எண்களைப் பயன்படுத்தி, இவை இந்தியாவில் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டவை என்பதை உணர்த்துமுகத்தான் இவற்றை 'இந்திய்யா' என்று அழைத்தார்'' என்றும் கூறும் இசுலாமியக் கலைக்களஞ்சியத்தின் கூற்று இதனை மெய்ப்பிக்கிறது.

இந்தத் தமிழ் எண்களை இந்திய எண்கள் என நேரு அவர்களும் தம் கடிதத்தில் (கடித எண்: 23) குறிப்பிட்டுள்ளார். இதனை நாகரி எண்கள் என எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. இவ் வெண்கள் உண்மையில் ஆரியர் கண்டதாக இருந்திருக்கு மாயின், நேருவும் பிறரும் பனிமலையின் உச்சியில் நின்றவண்ணம் உலகினரைக் கூவிக் கூவி இன்றைய உலக எண்கள் ஆரிய எண்களே எனப் பறையறைந்து அறிவித்திருப்பர். அவ்வாறு கூருததொன்றே அவ் வெண்கள் தமிழர்கண்ட தமிழ் எண்கள் என்பதற்கு அப் பனிமலை முகட்டினும் உயர்ந்த சான்ருகத் திகழ் கின்றது

மறைக்கப்பட்டுக் கிடக்கும் தமிழ்நாட்டின் உண்மை வர லாற்றை நோக்குவார்க்கு யான் மேற்கூறிய கூற்று மிகைக் கூற்று அன்று என்பதும் மெய்க்கூற்றே என்பதும் புலனுகும்.

தமிழர் எண்களைப் பப்பத்தாக அமைத்த பாங்கினையும், ஒன்றிற்குக் கீழ் உள்ள கீழ்வாய் எண்களையும், ஒன்றிற்கு மேற் பட்ட மேல்வாய் எண்களையும் எத்துணை நுட்ப அறிவுடன் வகுத்

துள்ளனர் என்பதையும் மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் நூல்களில் காணலாம்.

கோடிக்கு மேற்பட்ட மேல்வாய் எண்களைக் குறிப்பிடத், தாமரை, சங்கம், ஆம்பல் வெள்ளம் போன்ற சொற்களை வழங்கியுள்ளனர். தொல்காப்பியம் இதனை, ''ஐயம் பல்லென வரூஉ மிறுதி, அல்பெயர் எண்'' (புள்ளி மயங்கு : 98) எனக் கூறுகிறது. இந் நான்கில் முதலிரண்டும் எவ் வெண்களைக் குறிக்க வழங்கியன என்பதை வள்ளலாரின் பாடலொன்றால் அறிய முடிகிறது. அப் பாடல் வருமாறு :

''சேடார் வளஞ்சூழ் ஒற்றிநகர்ச்
　　செல்வப் பெருமான் இவர்தமைநான்
ஓடார் கரத்தீர் ! என்டோள்கள்
　　உடையீர் ! என் ?என் றுரைத்தேன்
கோடா கோடி முகம்,நூறு
　　கோடா கோடிக் களம்என்னே,
ஈடாய் உடையாய் ! என்கின்றார்
　　இதுதான் சேடி என்னேடீ ?''

இப்பாடல் வழிக் கோடா கோடி முகம், அஃதாவது தாமரை போன்ற முகம் என்றும், நூறு கோடா கோடிக் களம், அஃதாவது சங்கு போன்ற கழுத்து என்றும் குறிக்கிறார். ஆகையால் தாமரை என்பது கோடா கோடி எண்ணையும், சங்கம் என்பது நூறு கோடா கோடி எண்ணையும் குறிக்கும் என்பது தெளிவாகின்றது.

இதன்வழி, ஆம்பல், வெள்ளம் இரண்டும் இதற்கு மேற்பட்ட எண்களைக் குறிக்கலாம் என்பதை ஓரளவு உணர முடிகின்றது. கா. சு. பிள்ளை அவர்களும், பாவாணர் அவர்களும் இத்தகைய மேல்வாய் எண்ணுப் பெயர்கள் குறிக்கும் எண்களைப் பற்றிக் கணித்துள்ளனர். ஆயின், அவற்றிற்கு மேற்குறித்தவண்ணம் பாடற் சான்றோ, இலக்கியச் சான்றோ இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. மறைந்துள்ள பழந்தமிழ்ப் பாக்கள் வெளிவரின் அவையும் புலப்படும் என்பது உறுதி.

உலகில் வேறு எம் மொழியினரும் இத்தகைய மேல்வாய் வாய்பாடுகளைப் பெற்றிருக்கவில்லை. சென்ற நூற்றாண்டில் 'ஒளியாண்டு' போன்ற பேரெண்களை அமைத்துள்ளனர். ஆயின், இஃது இன்றைய அறிவியலின் பயனாய் விளைந்ததேயன்றி, இன்று காணப்பட்டதேயன்றித், தமிழர் கண்ட பப்பத்தின் அடிப்படையினின்றும் வகுத்தமைத்துக்கொண்டதேயன்றி ஒளியாண்டு போன்றவை பழைமையான எண்கள் அல்ல.

பாவாணர் எடுத்துக்காட்டும் கீழ்வாய் எண்களையும் மேற்குறிப்பிட்ட மேல்வாய் எண்களையும் நோக்குவார்க்கு இன்றைய உலக எண்கள் அன்றைய தமிழர் கண்டதுதான் என்பது ஐயமற விளங்கும். மேலும், பல நாட்டு மக்களின் எண்ணறிவை ஒத்து நோக்குவதும் ஆரியரோ பிறரோ காணாத, தமிழர் கண்ட எண்ணியலின் சிறப்பினை உணர்த்தும். அதனை இனி நோக்குவோம்.

அந்தமான் தீவிற்குத் தெற்கே இரட்லண்டு தீவிலிருந்து முப்பது கல்லுக்கு அப்பால் சின்ன அந்தமான் என்றொரு தீவு உள்ளது. இங்கு, ஓங்கே என்னும் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். உலகில் வாழும் பழங்குடி மக்களில் நெருப்பை எப்படி உண்டாக்குவது என்பதுபற்றித் தெரியாதவர்கள் இவர்களே. இன்னும் அம்மணமாகவே திரியும் இவர்களுக்கு மூன்றுக்குமேல் எண்ணத் தெரியாது.

நியூ ஆலந்து நாட்டுமக்கள் இரண்டுக்குமேல் எண்ணும் எண்ணுப் பெயர்களை அறியார். விக்டோரியாவில் வாழும் பழங்குடி மக்களின் மொழியில் ஒன்று, இரண்டு என்னும் எண்களே உள்ளன. இதற்குமேல் எண்ணுதலை இம் மக்கள் அறியார்.

தென் அமெரிக்காவில் வாழும் பூரிகள் என்னும் மக்கள் மூன்று என்பதைப் பல என்று உணர்த்துகின்றனர். இதனோடு வட மொழியின் இலக்கண அமைப்பை ஒத்திட்டு நோக்கினால் ஓர் உண்மை புலப்படும்.

அஃதாவது தமிழ் இலக்கணத்தில் எண் ஒருமை பன்மை என இருவகைப்படும். ஆனால், வடமொழியிலும், சில ஆரிய இன மொழிகளிலும் ஒருமை இருமை பன்மை என்ற வழக்கே உள்ளது இது ஏன் ?

ஒன்றுக்கு மேற்பட்டதெல்லாம் பன்மை என்ற இயற்கை நெறியை விடுத்து ஒருமைக்கும் பன்மைக்கும் இடையே இருமை என்ற வழக்கை வடமொழி கொண்டுள்ள தன்மை எண்பற்றிய அதன் வரலாற்றைக் காட்டுகின்ற ஓர் அரிய சான்றாகும்.

ஆரிய இனத் தொல்குடியினர் இரண்டுவரை எண்ணத் தெரிந்து அதற்கு மேற்பட்டதை யெல்லாம் பல எனத் தென் அமெரிக்கப் பூரிகளைப் போல வழங்கி வந்திருக்கின்றனர். அந்த வழக்கே அவர்கள் இலக்கணத்திலும் இடம் பெற்றுள்ளது.

எண்களைப் பதின்மடங்காக எண்ணிக்கொண்டு செல்லும் தமிழர்களுக்கு ஆரியர் எத்துணை பிற்பட்டவர், அறிவு நிலையில் எத்

துணை தாழ்ந்தவர் என்பதை அவர்தம் இலக்கண எண் அமைப்பே தெள்ளத் தெளிவாய்க் காட்டுகின்றது.

மேற்குறித்தவர்களைப் போலன்றி மூன்றுக்குமேல் எண்ணத் தெரிந்த மக்களும் உண்டு. நாம் பத்தை ஓர் எல்லையாகக் கொண்டு எண்களை மேலும் எண்ணுவதைப்போல அமெரிக்கப் பழங்குடி களில் சிலர் ஐந்தை எல்லையாகக் கொண்டுள்ளனர்.

அமெரிக்கப் பழங்குடி மக்கள்பேசும் அல்கோன்கின் (Algon-quin) மொழியில் முதல் ஐந்து எண்களே அடிச் சொற்களாக - இயல்பானவையாக அமைந்துள்ளன. பத்து என்பதை அவர்கள் ஐந்து மிகுதி என வழங்குவர். இம் முறை ஒருகை விரல்களை எல்லையாகக் கொண்டு எண்களை அமைத்துக்கொண்டமையைக் காட்டுகின்றது.

இனி, இசுபெயின் நாட்டின் வடபகுதியிலும் பிரெஞ்சு நாட்டின் தென்பகுதியிலும் பாசுகு (Basque) என்னும் மொழியினர் தம் மொழியைத் தூய்மையாகக் காத்து வருகின்றனர். இப் பாசுகு மொழி திராவிட இனத்தைச் சேர்ந்தது என்று இன்று மொழியிய லறிஞர்களால் நிறுவப்பட்டுள்ளது. இம் மொழியினரிடம் எண்களை இருபது இருபதாக எண்ணும் முறை உள்ளது. இவர்கள் 39-ஐ மூன்று பத்தும் ஒன்பதும் என்று கூறுமல் இருபதும் பத்தொன் பதும் என்பர். 60-ஐப் பத்தால் அளந்து நாம் அறுபது என்போம். ஆயின் இப் பாசுகு மொழியினர் இருபதால் அளந்து மூன்று இருபது என்பர்.

இத்தகைய பல்வேறு வகையான எண் பற்றிய வழக்குகள் உலகில் இருப்பினும் தமிழர் கண்ட பத்தை எல்லையாக உடைய எண்களே உலக எண்களாக அமைந்து இன்றைய அறிவியலுக்கு அடிப்படையாக உதவி வருகிறது.

பத்தை எல்லையாகக் கொண்ட எண் முறை தமிழர் கண்டது தான் என்பதற்கு மேற் கூறிய சான்றுகளே போதுமானவை. எனினும், கொடுங்கடல்கோளுக்கும், கொடிய பகைக்கும் தப்பி இன்றும் வாழும் தமிழ் இலக்கியங்கள் இவ் வுண்மையை நிலை நாட்டும் வன்மைமிகு சான்றுகளாகத் திகழ்கின்றன.

உலகின் மிகப் பழைய இலக்கியங்கள் எதிலும் தமிழில் உள்ள தைப் போன்று எண்ணுப் பெயர்கள் இருப்பதைக் காண முடியாது. இருப்பின் எடுத்துக் காட்டுங்கள் பார்க்கலாம்! தமிழர் தம் வரலாற் றையும் பண்பாட்டையும் திறமுறக் காட்டும் புறநானூறு,

"ஒன்றுபத் தடுக்கிய கோடி கடையிரீஇய
பெருமைத் தாகநின் னாயுள் தானே" —புறம் : 18

எனப் புகல்கின்றது.

சேரர் தம் பத்தடுக்கு நூலாகிய பதிற்றுப்பத்தோ, "நின்னாள் திங்கள் அனையவாக திங்கள், யாண்டோ ரனைய வாக யாண்டே, ஊழி யனைய வாக வூழி, வெள்ள வரம்பின வாகென" (பதிற் : 90) எனப் பகர்கின்றது. ஐங்குறுநூறு என்னும் அருந்தமிழ் இலக்கியம் "வெள்ள வரம்பின் ஊழி போகியும்" (ஐங் : 281) என வெள்ளம் என்னும் மேல்வாய் எண்ணை எல்லையாகப் பெற்ற ஊழிக் கால முடிவு என உரைக்கின்றது.

இசையோடு மிளிரும் வரிப்பாடல் அனைய பரிபாடல் பத்தடுக்கு எண் முறையைப் பாங்காய் வரிசைப்படுத்திக் கூறுகிறது.

"பதிற்றுக்கை மதவலி நூற்றுக்கை யாற்றல்
ஆயிரம் விரித்தனகம் மாய மள்ள
பதினா யிரங்கை யாறறி கடவுள்
அனைத்து மல்லபல அடுக்கல் ஆம்பல்
இனைத்தென எண்வரம் பறியா ......" —பரி : 3

கோடிக்கு மேற்பட்ட அடுக்கிய பேரெண்களைக் குறிக்கத் தமிழர் அமைத்த எண் குறியீடுகளே ஆம்பல், வெள்ளம் போன்றவை என்பதை மற்றொரு பரிபாடல்,

"நெய்தலுங் குவளையும் ஆம்பலுஞ் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி ஈட்டம் ...." —பரி : 2

எனச் செப்புகின்றது.

இம்மட்டோ? கீழ்வாய் எண்களைக் குறிக்கும் சொற்களைக் கொண்டே அருமையான ஓர் இரட்டுற மொழிதற் பாடலை அமைத்துக் காட்டுகிறார் காளமேகப் புலவர். அஃதாவது,

"முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால் கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது."

இத்தகைய மேல்வாய் கீழ்வாய் எண்களைக் கூறும் இலக்கியங்கள் எம் மொழியிலேனும் இத்துணை வளமாய் இருக்கின்றனவா? எண்ணுங்கள்!

மேலும், உலகில் எண்ணின் பெயர்களை இலக்கியத்தின் பெயர்களாகக் கொண்டுள்ள மொழி தமிழ். அதிலும், மிகப் பழைய தமிழ் இலக்கியங்களும் நூல்களும் கூடத் தன் அமைப்பைப் பத்துப் பத்தாக வகுத்துக்கொண்டு செல்லும் முறையைத் தமிழிலன்றிப் பிறமொழிகளில் காண்பது அரிது.

பத்துப் பத்தாகப் பத்துப் பகுதிகளைக் கொண்டுள்ள 'பதிற்றுப் பத்து' என்னும் பைந்தமிழ் இலக்கியம்போல் எண்ணின் பெயரைப் பெற்ற இலக்கியம் உலகில் பிறிதொன்றில்லை. வேட்கைப் பத்து (1) முதல் வரவுச் சிறப்புரைத்த பத்து (50) என உள்தலைப்புகள் தோறும் பத்து என்னும் எண்ணின் பெயரைக் கொண்டு விளங்கும் அருந்தமிழ் ஐங்குறு நூற்றுக்கு ஒப்பான எண்ணுப் பெயர் இலக்கியம் எங்கும் உண்டோ?

மேலும், பத்துப் பத்தாகக் கருத்துக்களை வகுத்துச் சொல்வது திருக்குறள் என்னும் முப்பால். தமிழ் இலக்கியங்கள் எல்லாம் பதினெண் மேல்கணக்கு (பத்துப்பாட்டு+எட்டுத் தொகை) பதினெண் கீழ்க்கணக்கு என எண்ணுப் பெயரைக் கொண்டுதான் வரையறுக்கப்பட்டுள்ளன.

இம் மேல்கணக்கிலும் அகநானூறு, புறநானூறு போன்றவற்றில் எண்ணுப் பெயர் இடம் பெற்றுள்ளது. கீழ்க்கணக்கிலும் நாலடியார், பழமொழி நானூறு, நாற்பது (இனியது, இன்னா, களவழி, கார்) நாலைந்திணை, (ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது) போன்று இலக்கியங்கள் யாவும் எண்ணுப் பெயராகவே இருக்கின்றன.

கழகக் காலத்தைவிட்டுப் பிற்கால இலக்கியங்களை நோக்கினாலும் மூன்று தொள்ளாயிரம் பாடல்களையுடைய முத்தொள்ளாயிரம், பத்துப் பத்தாகப் பத்துப் பருவங்களை உடைய பிள்ளைத் தமிழ் போன்ற பல இலக்கியங்கள் உள்ளன. மற்றும் இரட்டை மணிமாலை, மும்மணிக் கோவை, நான்மணிமாலை போன்ற நூல்கள் பல.

சமய இலக்கியங்களும் பன்னிரு திருமுறை எனவும், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் எனவும் எண்ணுப் பெயராலேயே வகுக்கப்பட்டுள்ளன. சித்தர் நூல்களும் திருமூலர் மூவாயிரம், போகர் எண்ணாயிரம் என எண்ணுடன்தான் பெயர் பெற்றிருக்கும்.

இவ்வாறு எவ்வகையில் நோக்கினாலும் தமிழர்தம் எண்ணியல் நுண்ணறிவைத் திண்மையுறக் கண்டு தெளிவுறலாம். இன்றைய

கணக்கியல் வளர்ச்சிக்கும், அறிவியல் மேம்பாட்டிற்கும் தமிழர் செப்பமுற வகுத்த பத்துப் பத்தான எண்ணியலோடு அடிப்படை எண்களுக்குரிய பேராற்றலையும் நுட்பத்தையும் உள்ளவாறு உணர்ந்தமையால்தான், எழுத்தால் படைக்கப்பெறும் இலக்கியங் களுக்குக் கூடத் தமிழர் எண்ணுப் பெயர்களை அமைத்துள்ளனர். இந்த உண்மையின் நுண்மையை எண்ணிப் பாருங்கள்!

இக் கட்டுரை எழுத உதவிய கருவி நூல்கள்

1. மொழி ஞாயிறு தேவநேயப் பாவணர் அவர்களின்

   1. ஒப்பியன் மொழி நூல்
   2. பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்.

2. பர். மு. வ. அவர்களின் 1. மொழிநூல்.

3. திரு. ந. இரா. முருகவேள் அவர்களின் 1. இலக்கணத்தில் எழிற்கற்பனைகள்.

மற்றும்

இந்தியப் பழங்குடிகள் (தனிநூல்)

செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி, தமிழம் (மாத இதழ்கள்)

"ஒல்லும்வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்" —குறள் : 33

இக் குறட்பா அளிக்கும் அரும்பொருட் கருத்துக்கள் வருமாறு:

1. ஒல்லும் அறவினை எல்லாம் செயல்
2. ஒல்லும் வழியான் எல்லாம் செயல்
3. ஒல்லும் கருவியான் எல்லாம் செயல்
4. ஒல்லும் கால மெல்லாம் செயல்
5. ஒல்லும் காலம் இடைவிடாது செயல்
6. ஒல்லும் இடங்களி லெல்லாம் செயல்
7. ஒல்லும் உயிர்கட் கெல்லாம் செயல்

—தி. கு. க.

"ஆந்திரர் சேரமரபினர்"

[பேராசிரியர். இரா. மதிவாணன்]

ஆந்திரரைச் சேரமரபினர் என்று சொல்வது அனைவர்க்கும் வியப்பளிக்கக் கூடும். தொன்மை வரலாறுகளையும் மொழியியல் கூறுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் இதன் உண்மை தெளிவாக விளங்கும். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மாந்தரின வரலாற்றைப் பேச்சுமொழிக் கூறுகள் வெளிப்படக் காட்டிக் கொடுத்து விடும். இதனை இன்றைய மொழியியல் வல்லுநர்கள் மொழியகழ் வாராய்ச்சி என்கின்றனர். ஒரு பெரிய நாட்டில் வாழும் ஒரே இனத்து மக்களிடையிலும் சில உட்பிரிவுகள் இருக்கத்தான் செய்யும். இடத்தால் பிரிந்து தொலைவில் வாழும் அவர்களுடைய பேச்சு மொழி, நாட்டின் பொதுமொழியிலிருந்து சிறிது வேறுபட்டிருக்கும். ஒருவனுடைய பேச்சுமொழியைக் கேட்டவுடன் இந்த ஊரிலிருந்து வருபவன் இவன் என நாம் கண்டுகொள்கிறோம். அவ்வாறு மலையாளிகளின் பேச்சையும் தெலுங்கரின் பேச்சையும் கூர்ந்து நோக்கினால் இந்த இரு இனத்தாரும் வரலாற்றால் சரியாக வரையறுக்க முடியாத பழங்காலத்தில் ஒரே இடத்தில் வாழ்ந்திருந்த சேரக்கிளை மரபினர் என்று அறிய முடிகிறது.

தமிழினத்து உட்பிரிவுகளின் பேச்சுமொழி நிலையைக் கணிக்கும் தொன்னெடுங்காலத் தொலைநோக்குடன் இக் கட்டுரையில் கூறப்படும் ஒருசில சான்றுகளை ஊன்றிப் பார்க்கவேண்டும். நான் இங்குக் காட்டுகின்ற சான்றுகளின் பின்னணியில் உள்ள வரலாற்று, மொழியியல், குமுகாயவியல் அமைப்புக்களை மேலும் ஆராய்ந்தால் அரிய உண்மைகள் அடுக்கடுக்காகப் புலப்படும்.

மூவேந்தருள் சேரர்க்கு முதன்மை

தமிழக மூவேந்தரை வரிசைப்படுத்திச் சொல்லும்போது, பண்டுதொட்டுச் சேரரின் பெயரையே முன்வைத்து 'சேர சோழ பாண்டியர்' எனக் குறிப்பிடுவது ஏன்? இதனை முறைமாற்றி யாரும் வழங்கவில்லை. மூவேந்தரின் அடையாளப் பூக்களைச் சொல்லும்போதும் 'போந்தை வேம்பே ஆர்' எனத் தொல்காப்பியத்திலும் சேரனின் பனம்பூமாலைக்கே (போந்தை - பனை) முதலிடம் தரப்படுகிறது.

கடைக்கழகக் (சங்க) காலத் தமிழகத்தில் சேரநாடு இடப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் சிறியது. சோழநாடு 50 காதமும் பாண்டிநாடு 30 காதமும் சேரநாடு 20 காதமும் பரந்திருந்ததாகக் கூறப்படுகிறது. பாண்டியன் தமிழ் வளர்த்த பெருமைக்குரியவன்; சோழன் காடு கெடுத்து நாடாக்கிய பெருமைக்குரியவன். எனவே எவ்வகையிலும் சோழ பாண்டியருக்கில்லாத முதலிடம் சேரனுக்கு எப்படி வாய்த்தது என்பது நம்முன் உள்ள வினா. இன்று கன்னடம் பேசும் மக்களும் தெலுங்கு பேசும் மக்களும் இம் மொழிகள் தோன்றிப் பிரிவதற்கு முன், மூவேந்தரினத்துள் எந்த இனத்தைச் சார்ந்தவராயிருந்தனர் என்பது இரண்டாவது வினா.

இந்துமாக் கடலுள் மூழ்கிய குமரிநாட்டில் மூவேந்தரின் முன்னோர் அரசோச்சிய காலத்தில், மூவேந்தரினும் சேரரே பெரிதும் மதித்துப் போற்றப்பட்டவராதல் வேண்டும். இடப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் சேரரே முதன்மை பெற்றவராக இருந்திருக்கவேண்டும். கடல்கோளுக்குமுன் மக்கள் தொகையில் மிக்கிருந்த சேரர் கடல்கோளுக்குப்பின் இந்தியாவின் பலவிடங்கட்கும் பரவினர்.

தொடர்பற்றுப் பிரிந்து வாழ்ந்த சேரக்குடி மக்களின் மொழி நாளடைவில் வேற்றுத் திரவிட மொழிகளாய்ப் பிரிந்தன. அங்ஙனம் பிரிந்துவந்த சேரக் கிளை மரபினரே ஆந்திரர் எனப்படும் தெலுங்கு பேசும் மக்களாவர். திரவிட இனத்தாரில் தெலுங்கரின் மக்கள் தொகை என்றும் மிகுதியாக வுள்ளது.

சேரர்களுக்கும் ஆந்திரர்க்கும் இருந்த குமரிநாட்டுக் கால இனவழி உறவை விளக்க வரலாற்றுச் சான்றுகளையோ கல்வெட்டுச் சான்றுகளையோ தேடிப்பிடிக்க முடியாது. தொல் பழங்கால மாந்த வரலாற்றை[1] மொழியியல் சான்றுகளால்தான் நிறுவ முடியும். குறிப்பிட்ட ஓரினத்தாரின் மொழி அவர்கள் தொலைவிடங்களுக்குப் பிரிந்து சென்றாலும் சில பழைய கூறுகளை விடாமல் போற்றிக் காத்துவரும். 10,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களிடம் கூடப் பேச்சுக்கிளைமொழி வேறுபாடு இருந்தே தீரும். அதன் விளைவாக இன்றும் கன்னட மொழியின் பேச்சு வழக்கில் தென் பாண்டி நாட்டுப் பேச்சுத் தமிழ்க் கூறுகளும், தெலுங்கில் பழங் காலச் சேரநாட்டுப் பேச்சுத் தமிழ்க் கூறுகளும் மிகுந்துள்ளன.

---

1. "The linguisto have to tell the historians a lot," Kontrakov—'Riddles of three Oceans'.

ஆந்திரர் சேர மரபினரே என்று வலியுறுத்துவதற்கு முதாமையான சில அடிப்படைகள் :

(1) மொழிச் சான்றுகள் (2) இடப்பெயர் மக்கட்பெயர்ச் சான்றுகள் (3) வரலாற்றுச் சான்றுகள் (4) பழக்க வழக்கச் சான்றுகள் (5) பிற சான்றுகள்.

1　மொழிச் சான்றுகள் :

ஆரியர் வருகைக்கு முன்னும் கடல்கோளுக்கு முன்னும் ஆந்திரரும் சேரரும் ஒரு குடி வழியினராய் ஒரே இடத்தில் வாழ்ந்தவர் என்பதற்குப் பல அடிப்படைப் பேச்சு வழக்குச் சொற்களும் மொழியின் கூறுகளும் வியக்கத்தக்க வகையில் ஒன்றுபட்டிருக்கின்றன. இவை சோழ நாட்டு அல்லது பாண்டி நாட்டுப் பேச்சு வழக்குகளோடு சிறிதும் ஒன்றுபடவில்லை.

இன்றைய பெருந்திரவிட மொழிகளில் மலையாளமும் தெலுங்கும் அளவிறந்த வடசொற்களைச் சேர்த்துக்கொண்டு பழைய மொழிநிலையை அறவே அறிய முடியாதவாறு மாறிப்போய் விட்டிருந்தாலும் நூற்றுக்கு ஒருசில சொற்களிலாவது அறப்பழங் காலச் சொல் வடிவங்களைக் காத்து வருவதால் பழைய உறவை நம்மால் கணிக்க முடிகிறது. ஒரு சின்னஞ்சிறு தடையம் கிடைத்தாலும் அதன் வாயிலாகப் பலநாள் திருடனை ஒருநாள் பிடித்து விடுவது போல ஒருசில மொழிக் கூறுகளின் ஆணித்தரமான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு அம் மொழியினரின் அறப்பழங்கால இனவுறவுகளைச் சரியாக வரையறுத்துவிட முடியும்.

திசைச் சொற்களுக்கு மேற்கோள் காட்டிய உரையாசிரியர்கள் தாயைத் தள்ளை என்பது குடநாட்டார் வழக்கு எனக் குறித்துள்ளனர். ஐந்து கோடித் தெலுங்கரும் தாயைத் தல்லி (தள்ளை) என்றே இன்றளவும் வழங்கி வருகின்றனர். தமிழரும் கன்னடியரும் தாயைத் தள்ளை என்று பேச்சிலும் வழங்குவதில்லை; எழுத்திலும் ஆள்வதில்லை. மலையாளத்திலும் ஆந்திரத்திலும் மட்டும் இந்த அடிப்படைச் சொல்லாட்சி எவ்வாறு வழக்கில் நிலைபெற்றது என்று கூர்ந்து நோக்கவேண்டும். சேர நாட்டில் மிளகுக்கு மிரியல் என்று பெயரிருந்தது. இது சேர நாட்டு விளைபொருள்; ஆந்திர நாட்டு விளைபொருளன்று.

(தொடரும்)

திரு. பொ. மாணிக்கவாசகம் பிள்ளை பவளவிழா

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கத் துணையமைச்சர் திரு. பி. மாணிக்கவாசகம் பிள்ளையவர்களின் பவளவிழா 11-3-79 அன்று மாலை திருச்சி தேவர் மன்றத்தில் செட்டிநாட்டரசர் அரசவயவர் திரு. முத்தையா செட்டியார் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. தமிழ்ச்சங்க அமைச்சர் திரு. பெரியசாமி அவர்கள் வரவேற்புரையில்,

> ''வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா நூற்றாண்டு விழா என்பன முறையே 25, 50, 60, 100 ஆண்டுகள் நிறைவினையொட்டி எடுக்கப்படும் விழாவாகும். தமிழகத்தில் 80 ஆண்டுகள் நிறைவைக் குறிப்பதற்கு, ஆயிரம் பிறைகண்ட பெரியவர்களுக்கு முத்துவிழா எடுக்கிறார்கள். 75 ஆண்டு நிறைவைக் குறித்து எடுக்கும் விழாவிற்குப் பவளவிழா என்று நல்லறிஞர்கள் பெயரிட்டுப் புதிய மரபை உண்டாக்கியுள்ளனர்''

என்றார். விழாமலரை வெளியிட்ட தமிழக மேலவைத் தலைவர் மாண்புமிகு ம. பொ. சிவஞானம் அவர்கள் தமது உரையில்,

> ''75 வயது வாழ்வது பெரிய செயல். அதிலும் நல்ல உடல் ஆரோக்கியத்தோடு, பார்வையோடு வாழ்வது சிறப்பாகும். அதை விடப் பெருமை மனைவி மக்களோடு வாழ்ந்து வருவதும், மக்கள் பேரக்குழந்தைகளுடன் பெருங் குடும்பமாக வாழ்ந்து இந்த விழாவைக் கொண்டாடுவதும் தான். அவர் அதைச் செய்தார் இதைச் செய்தார் என்பதைக் காட்டிலும், இவ்வளவு ஆண்டுகள் நன்கு வாழ்ந்தார் என்பதற்காகவே விழாக் கொண்டாடலாம்''


என்று கூறினர். செட்டி நாட்டரசர் அவர்கள் தலைமையுரையில்,

> ''மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள் என்னுடைய பள்ளித் தோழர். அக் காலத்தில் நாங்களெல்லாம் சேர்ந்து தீவிரமாக இந்தியை எதிர்த்துப் போர் செய்து வந்தோம். பல வெளியூர்களில் மாநாடுகள் நடத்துவோம். எல்லா மாநாட்டிலும் மாவன்னு கலந்துகொண்டு மாநாட்டைச் சிறப்புற நடத்த உதவுவார்கள். எங்களுடைய லட்சியம் இந்தியை எடுத்துவிட்டு ஆங்கிலத்தைக் கொண்டு வருவது அல்ல. இந்தியை எதிர்த்தால்தான் தமிழ் வளரும்.''

என்றும் பிறவாறும் பலபடப் பாராட்டி வாழ்த்தினர்கள்.

பேராசிரியர் இல. ப. கரு. இராமநாதன் செட்டியார், டாக்டர் மெ. சுந்தரம், பேராசிரியர் இரம்போலா மாஸ்கரேனஸ் ஆகியோரும் பாராட்டியும் வாழ்த்தியும் பேசினர். கவிதாமணி அ. வே. ரா. கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள் நன்றி நவின்றார்கள். திரு. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் ஏற்புரையாற்றினர். விழாவில் திரு. பிள்ளையவர்களுக்குத் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ''தமிழிசைச் செல்வேள்'' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

திருச்சி பொ. மாணிக்கவாசகம் பிள்ளை பவளவிழா



திருச்சி தமிழ்ச் சங்கத் தலைவர்
திரு இரா. கிருட்டிணசாமி ரெட்டியார் விழாச் செல்வருக்குப்
பொன்னுடை போர்த்தி விருதினை அளிப்பது.



செட்டிநாட்டரசர் டாக்டர் சர். முத்தையா செட்டியாரவர்கள்
தலைமை தாங்கி விழாச் செல்வரைப் பாராட்டிப் பேசுதல்.

செய்திகளும் குறிப்புக்களும்

தனித்தமிழ்த் தந்தை தவத்திரு மறைமலையடிகளார் விழா

பாளை, தனித்தமிழ் இலக்கியக் கழகச் சார்பில் 17—2—79, 18—2—79 ஆகிய இரு நாள்களிலும் தமிழர் திருவிழாவும், தவத்திரு மறைமலையடிகளார் விழாவும் சிறப்புற நிகழ்ந்தன.

முதல் நாள் நிகழ்ச்சி கம்பராமாயண எழில் மண்டப முற்றத்தில் நிகழ்ந்தது. தென் மண்டலக் காவல்துறை அலுவலர் சீர்மிகு சி. துரைராசு தலைமை தாங்கினர். அவர்தம் அருமைத் துணைவியார் திருமிகு கோதை நாச்சியார் பரிசு வழங்கினர். இலக்கியச் செம்மல். இரா. இளங்குமரன் நடுவராக இருக்க வழக்காடு மன்றம் நிகழ்ந்தது.

மறைமலையடிகளார் விழா மன காவலனுர் திருமண மண்டபத்தில் தொடங்கியது. அருள்மிகு முனைவர் வி. மி. ஞானப்பிரகாசர் நூற் காட்சியைத் திறந்து வைத்தார். பேராசிரியர் கா. மாயாண்டி பாரதி யார் தலைமையில் கருத்தரங்கம் நிகழ்ந்தது. பேராசிரியர்கள் பலர் கருத்துரை வழங்கினர். பின்னர் இலக்கியச் செம்மல் இரா. இளங் குமரன் தலைமையில் மறைமலையடிகளார் பாட்டரங்கம் நிகழ்ந்தது. பாவலர் மு. அகி. காந்திராசன், பேராசிரியை சந்திரலீலா ஆதித்தன், புலவர் முத்துராமலிங்கம் ஆகியோர் தங்கள் அரிய படைப்புக்களை அரங்கேற்றிச் சிறப்பித்தனர். திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் பாவலர் இராசுமுத்து நன்றிப்பாப் பொழிந்தார்.

அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீனின் நூற்றுண்டு விழா

சார்புநிலைக் கொள்கையைக் கண்டுபிடித்த ஐன்ஸ்டீன் பெருமக ஞரின் 100 ஆவது பிறந்தநாள் விழா உலகமுழுவதும் இம் மாதம் சிறப் பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. நோபல் பரிசு பெற்ற அவர் தம் அறிவாற்றலின் திறனைக் கண்டறியும் வகையில் அவர் மறைந்த பின் அவர்தம் மூளை மருத்துவர்களால் ஆராயப்பட்டு வருகிறது. அதனை ஆய்வுசெய்த மருத்துவர் தாமஸ் ஹார்வே மற்ற மனிதர்களுக்கு உள் ளதைப் போலவே ஐன்ஸ்டீனின் மூளையும் உள்ளது என்று கூறி யுள்ளார்.

அப்பா மாசிலாமணி முதலியார் திருவுருவச் சிலைத்திறப்பு விழா

வாலாசாபாத் இந்துமத பாடசாலையினையும் அதன் சார்பில் மாணவர் இல்லத்தையும் தோற்றுவித்துக் கல்வியுலகில் அனைவ ராலும் அப்பா என்று அழைக்கப்பெற்று 1967 இல் இறையடி சேர்ந்த பெரியவர் திரு. வா தி. மாசிலாமணி முதலியார் அவர்களின் திருவுருவச் சிலைத்திறப்பு விழா 26—3—79 அன்று டாக்டர் B. M. சுந்தரவதனம் அவர்கள் தலைமையில் நடந்தது. முன்னுள் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு அவர்களால் சிலை திறந்து வைக்கப்பெற்றது. இவ் விழாவினை யொட்டித் திரு. ந. ப. தணிகையரசு அவர்கள் பாடிய "அப்பா மாசிலாமணி முதலியார் துதிப்பாமாலை" ஒன்றும் வெளியிடப்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் ஆசைத்தம்பி மறைவு

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலாளருமான திரு ஆ. வ. ப. ஆசைத் தம்பி அவர்கள் தமது கட்சியின் சார்பில் சொற்பொழிவாற்றும் பொருட்டு அந்தமான் சென்று 8—4—79 அன்று, தமது 55 ஆவது அகவையில் அங்கேயே காலமான செய்தியறிந்து பெரிதும் வருந்து கின்றோம்.

விருதுநகர் திரு பழனியப்பன் நாகம்மாள் ஆகியோர்க்கு 24—9—1924இல் நன்மகனாகப் பிறந்த ஆசைத்தம்பி அவர்கள் தன்மான இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடும் கொள்கை உறுதியும் கொண்டவர். அவ் வியக்கத்தின் வெற்றிக்காகத் தமது 22ஆம் அகவையிலேயே சிறை புகுந்த இவர் இதுவரை 10 முறை சிறைத் தண்டனை பெற்றுள்ளார். இந்தி யெதிர்ப்புப் போர் முதலியனவாகத் தி. மு. கழகத்தினர் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் இவர் கலந்துகொண்டுள்ளார்.

துவக்கத்தில் விருதுநகரில் 'தனியரசு' 'திராவிட சினிமா' ஆகிய இதழ்களை நடத்தி வந்த ஆசைத்தம்பி அவர்கள் 1958 முதல் 63 வரை 'தனியரசு' இதழைச் சென்னையினின்றும் நாளேடாக நடத்திவந்தார். துடிப்பு மிக்க எழுத்தாளரான இவர் இதுவரை 40 நூல்கள் எழுதி யுள்ளார். சில திரைப்படங்களுக்குக் கதை உரையாடல்களும் எழுதி யுள்ளார். 'காந்தியார் ஆத்மா சாந்தியடைய' என்னும் நூலை எழுதியமைக்காகச் சிறைத் தண்டனை யளிக்கப்பெற்று ஆங்குத் துன்புறுத்தப் பெற்றார்.

1946 முதல் 56 வரை 10 ஆண்டுக்காலம் விருதுநகர் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1957இல் ஆயிரம் விளக்குத் தொகுதியின் சார்பிலும் 67இல் எழும்பூர்த் தொகுதியின் சார்பிலும் தேர்ந்தெடுக்கப் பெற்று 9 ஆண்டுக்காலம் தமிழ்நாட்டின் சட்டமன்ற உறுப்பின ராகவும் இருந்து நன்முறையில் பணியாற்றிய திரு ஆசைத்தம்பி 1977இல் வட சென்னைத் தொகுதியினின்றும் இந்தியப் பாராளு மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அண்மையில் இந்தித் திணிப்பை எதிர்த்தும், தாழ்த்தப் பெற்றோர் உரிமை நலங் களின் பொருட்டும் பாராளுமன்றத்தில் இவர் ஆணித்தரமாகப் பேசி முழக்கமிட்டது குறிப்பிடத் தக்கது.

1968—69இல் மதிப்பீட்டுக் குழுத் தலைவராக விளங்கிய திரு. ஆசைத்தம்பி அவர்கள் 1968இல் இங்கிலாந்தில் நடைபெற்ற 'காமன் வெல்த்' மாநாட்டில இந்தியப் படிநிகராளியாராகக் கலந்துகொண் டார். 68இல் சிங்கப்பூருக்கும் 72இல் தாய்லாந்திற்கும் சென்றுவந் துள்ளார்.

திரு ஆசைத்தம்பி அவர்களின் பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தார்க்கும், அவர் சார்ந்திருந்த இயக்கத்தார்க்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அவர்தம் நல்லெண்ணங்கள் நிறைவேறுக! புகழ் நிலைபெறுக!

டாக்டர் வே. இராகவன் மறைவு

சென்னைப் பல்கலைக் கழகச் சமற்கிருதத் துறைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவரும், சமற்கிருத நூல்கள் பலவற்றைப் பதிப்பித்துள்ளவரும், இசைத் துறையிலும் பல ஆய்வு நூல்கள் எழுதியவரும் 'சமற்கிருத பிரதிபா' என்னும் இதழுக்கு ஆசிரியராக விளங்கியவருமான டாக்டர் வே இராகவன் அவர்கள் தமது 71ஆம் அகவையில் 5—4—79 அன்று இரவு மாரடைப்பால் காலமானார் என் றறிந்து வருந்துகின்றோம்.

தமிழ்நாட்டில் பிறந்து சமற்கிருதத்தில் நிறைந்த புலமையும் பற்றுமுடையவரான இவர் தொன்மை நலம் வாய்ந்த தமிழிலும் ஈடுபாடு கொண்டிருந்திருப்பின் இவர் பணியும் புகழும் மேலமேல் விளக்கெனச் சிறப்புற்றிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு இராகவன் அவர்களின் பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தார்க்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளு கின்றோம்.

திரு. பூட்டோவுக்குக் கொலைத் தண்டனை

பாக்கித்தான் நாட்டின் மேனாள் தலைமையமைச்சர் திரு. பூட்டோ அவர்கள் தாம் பதவியில் இருந்தபோது தமது அரசியல் எதிரி ஒருவரைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாற்றப்பெற்று நெடு நாள் சிறைக்காவலில் வைக்கப்பெற்றிருந்தார். இவர்மீது சாற்றப் பெற்ற குற்றம் உண்மையானதே என்று உறுதிப்படுத்திப் பாக்கித் தான் உச்ச நீதிமன்றம் அவருக்குத் தூக்குத் தண்டனை வழங்கியது. இதனை யொட்டிப் பாக்கித்தான் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் படைத் துறை ஆட்சித் தலைவர் திரு. ஜியா அவர்கள் பூட்டோவைத் தூக்கி லிட உத்திரவிட்டார். இச் செய்தியறிந்து தூய போப்பாண்டவர் அவர்களும் அயல்நாட்டுத் தலைவர்கள் பலரும் திரு. பூட்டோவுக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைக்குமாறு வேண்டுகோள் விடுத் தனர். ஆயினும் அவ் வேண்டுகோள்களும் புறக்கணிக்கப்பட்டு 5—4—79 அன்று பூட்டோ அவர்களுக்குத் தூக்குத் தண்டனை நிறை வேற்றப்பட்டது.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் பரல்-அ, ௯௪0ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	10 00
,, ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக மேலாளர்,	5 00
,, மா. ரா. இளங்கோவன், தமிழ்த்துறை புதுக்கல்லூரி, சென்னை	102 00
திருமதி பத்மாவதி சேதுபதி அவர்கள், சென்னை-28	100 00
புலவர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்	100 00

திரு. வா. செ. வெங்கடாசலம் அவர்கள் சென்னை-28	10	00
Mr. G. Kulathooran, Trivandrum	100	00
Dr. ந. சஞ்சீவி அவர்கள், தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை	100	00
திரு. அ. இராகவன் அவர்கள், பாளையங்கோட்டை	100	00
திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-20	50	00
திரு. சிவ. சிவராமலிங்கம் அவர்கள், சென்னை-1	100	00
Thenammai Krishnan Charitable Trust, Paganeri	100	00
திரு. பெ. திருஞான சம்பந்தன் அவர்கள் தி. நகர், சென்னை-17	100	00
திரு. மு. வை. அரவிந்தன் அவர்கள், வேலூர்	51	00
Rev. Fr. V. Antony John, Madras-15	100	00

மதிப்புரை

பெரியார் புகழ் 100

[ஆசிரியர்: புலவர் தி. நா. அறிவு ஒளி க.மு.; வெளியீடு: தி. ஞா. தொல்காப்பியன், 23 மந்தைவெளித் தெரு, நால்வர் பேட்டை, திருக்கழுக்குன்றம்-603109; விலை: உருவா 2-00.]

பகுத்தறிவுத் தந்தை ஈ. வே. இராமசாமிப் பெரியார் அவர்களின் புகழ்பரப்பும் முறையில் நூறு தலைப்புக்களின் கீழ்ப் புனையப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களால் அமைந்துள்ளது இந்நூல். பாவும் இனமும் இசைப்பாவுமான பாடல்கள் யாவும் தொடைநலஞ் சிறந்து விளங்குகின்றன; பெரும்பாலும் தனிச் செந்தமிழில் அமைந்துள்ளன.

நிறைந்தேன்

[ஆசிரியர்: அருளி; கிடைக்குமிடம்: அறை எண் 2, மாணவர் இல்லம், 17 இருசப்பக் கிராமணி தெரு, கிருட்டிணாம் பேட்டை, சென்னை-600005; விலை: உருவா 3-00.]

பல்வேறு தலைப்புகளின் கீழ்ப் புனையப்பட்டுள்ள பாக்கள், பாவினங்கள், இசைப்பாக்கள் ஆகியவற்றினுல் அமைந்துள்ளது இந் நூல். பாடல்கள் யாவும் தனிச் செந்தமிழில் யாக்கப்பட்டுள்ளன; இன்னோசை தழுவி யமைந்துள்ளன. தமிழ்மக்களுக்கு எழுச்சி யூட்டும் தனித்திறத்தன. மொத்தத்தில் தமிழுணர்வாளர்கட்கு இஃது ஒரு நல்விருந்து எனலாம்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

பாரதிதாசன் இலக்கியம்—டாக்டர் இளங்கோ	4	90
தமிழ் நாடகம் ஓர் ஆய்வு—டாக்டர் ஏ. என். பெருமாள்	16	00
பாரதியும் பாட்டும்—பெ. தூரன்	3	00
தமிழர் சமுதாய வரலாறு—அரு. சின்னசாமி	4	50
தமிழகப் பெண்மணிகள்—ரா. பி. சேதுப்பிள்ளை	3	00
திருப்பாவை மூலமும் விளக்கவுரையும் —T. S. ராஜகோபாலன்	5	00
ஏழிசை வல்லபி—வே. கபிலன்	25	00
அரக்கு மாளிகை—லட்சுமி	24	00
முக்கனிச் செல்வங்கள்—இந்திரா சுப்பிரமணியம்	4	25
பத்திரிகைத் தமிழ்—தங்கமணியன்	10	00
அறிஞர் அறவாழி—க. த. திருநாவுக்கரசு	6	00
இக்காலக் கதைகள் மரபும் புதுமையும் —து. மூர்த்தி, எம். ஏ.	6	00
மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள் —நவராஜ் செல்லையா	3	50
காப்பியப் புனைதிறன்—ா. வே. சுப்பிரமணியம்	12	00
தமிழ் நாவல் வகைகள்—டாக்டர் த. வே. வீராசாமி	10	00
தமிழ் வில்லுப் பாட்டுக்கள்—தி. சி. கோமதிநாயகம்	12	00
பாரதியும் தமிழும்—பெ. தூரன்	3	75
சிலம்பின் கதை அமைப்பு—இரா. பி. சேதுப்பிள்ளை	3	00
கலையும் மொழியும்—கான்ஸ்டாடின் ஃபெடின்	3	00
ஓவியக்கலை உலகில்—விட்டல்ராவ்	7	00
அருட்குமரன் அறுபடை வீடுகள் —க. பொ. சுந்தரவடிவேலனுர்	6	00
மனமோகம்—சாண்டில்யன்	17	50
செஞ்சி அபரஞ்சி—கோவி. மணிசேகரன்	6	00
தூரத்து வெளிச்சங்கள்—என். ஆர். தவன்	12	00
திருத்தி எழுதிய தீர்ப்பு—இரா. வைரமுத்து	5	00
இதய மலர்கள்—கே. ஆர். வாசுதேவன்	7	00
விளையாட்டுச் சிந்தனைகள்—எஸ். நவராஜ் செல்லையா	3	00
Dravidians and Africans —Dr. K. P. Aravanan	25	00

அப்பர் அச்சகம், சென்னை-1.